தோன்றல்

அரிய நாயகம்

1946

## தோன்றல்

# அரியநாயகம்

வித்துவான் - ஐ. நடேசன்,
நார்த்விக் மாதர் உயர்பள்ளி, சென்னை.

[illegible]ப் பதிப்பகம்
பட்டை, சென்னை
1946 [விலை அணு 12.

THONRAL

# RIYANAYAGAM

BY

**VIDWAN. A. NATESAN,**
*North Wick Girl's High School, Rayapuram,*
*Madras.*

**AWAI PUBLISHING HOUSE,**
SAIDAPET, MADRAS.

*Right]* 1946 [*Price* 0-12-0

பக்கம்
1
4
9
16
20
23
30
33
35
40
42
55
66
69
73
78
82
84
86
87

# முன்னுரை

"நல்லார் குணங்களுரைப்பதுவும் நன்றே" என்பது நன்மொழி. அன்றியும் நம் நாட்டு நல்லார், நாட்டுக்கு நலம்புரிந்து நற்புகழ் பெற்ற பெரியார், வரலாறு உணர்வதில் நலம் பல விளையும், இவ்வுணர்ச்சி வரலாற்றுப்பாட (சரித்திர) மூலம் கற்பதினும் கதைப் பாடமாகக் கற்றல் இனிமையாயுமிருக்கு மென்பதை யாவரு முணர்வோம். ஆகவே இக்கதைப் புத்தகம் தோன்றியது.

பல அறிஞர்கள் அரியநாதரைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். ஆனால் பள்ளியில் பயில்வோர் அவரைப்பற்றி முழுது முணர்வான் இஃதும் வேண்டுமென எழுதினேன்.

இச்சிறு நூல் பல வகையிலும் அரியநாதருடைய வாழ்நாளை ஆராய்ந்து மரபு வழாமல் தொடர்ந்து வரையப்பட்டது.

இது உயர் 4-5-6 ஆம் (IV to VI Forms) வகுப்புக்கேற்றவாறு மொழி நயமும் பொருளமைதியுமுற வரையப்பட்டது.

இதையும் தமிழுலகம் தாங்கி யுதவுமென்று நம்புகின்றேன்.

நார்த் விக்; சென்னை.
1—10—1946

ஐ. நடேசன்

# உள்ளுறை

M. I. P. PROJECT
Microfilmed


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | தோற்றுவாய் | 1 |
| 2 | நற்பிறப்பு | 4 |
| 3 | கலைஞானம் | 9 |
| 4 | சென்றவிடம் | 16 |
| 5 | கணக்கறிவு | 20 |
| 6 | நகரறிந்த நன்மதிப்பு | 23 |
| 7 | முதலியும் மந்திரியும் | 30 |
| 8 | திருமணங்கள் | 3[illegible] |
| 9 | கடமை | 35 |
| 10 | அரிய பரிசு | 40 |
| 11 | மந்திரியும் தளவாயும் | 42 |
| 12 | தென்னாட்டுப் போர்கள் | 55 |
| 13 | கோட்டையும் காவலும் | 66 |
| 14 | பழமை மறவாமை | 69 |
| 15 | தாயரசு காத்தல் | 72 |
| 16 | குடி செயல் | 7[illegible] |
| 17 | முதுமையிலும் முயற்சி | 8[illegible] |
| 18 | முதுமையில் சூட்டிய முடி | 84 |
| 19 | தோன்றல் | 85 |
| 20 | கால வரையறை | 87 |


உ

# தோன்றல் அரியநாயகம்

## 1. தோற்றுவாய்

### பாரத நாடு

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழி லொழுகும் சீராரும் வதனமெனத்" திகழ்வது **பாரத நாடு**. இது **நாவலந்தீவு** எனவும் **கருமபூமி** எனவும் சிறப்பித்துக் கூறப்படுவது; கிழக்கு, தெற்கு, மேற்கு என்னும் முத்திசையிலும் கடலரணும் வடக்கே மலையரணும் உடையது.

நாவலந் தீவு, நதிகளாலும் மலைகளாலும் காடுகளாலும் செழிப்புற்றது; எனவே, மலை, காடு, வயல், கடல் என நானிலமாகப் பகுத்துரைக்கும் பான்மையும் மேன்மையும் இதற்குண்டு. இப்படிப்பட்ட பாரதநாடு **இந்தியா** என்னும் பெயருடன் இக்காலத்தில் வழங்குகிறது, இந்தியா இயற்கை வளமுடையது. ஆதலால், பல நாட்டு மக்களும் குடியேறினர். நாளடைவில் குடிவளமும் மிகப் பெற்றது. எந்நாட்டினும் மிக்க இந்நாடு **வட இந்தியா, தென்னிந்தியா, மத்திய இந்தியா** என்னும் முப்பிரிவுடையது. அவற்றுள் தென்னிந்தியா **தென்னாடு** எனப்படும்.

தென்னாடு பொதுவாகத் **திராவிட நாடு** எனவும் படும். திராவிட நாட்டில் வாழ்ந்த மக்கள் பல மொழிகளைப் பேசுவர். அம்மொழிகள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியன. இம்மொழிகளைப் பேசும் காரணத்தால் அந்தந்த மக்கள் வாழ்ந்த நிலங்களுக்கு அவ்வம் மொழியின் பெயரே வழங்கலாயின. ஆகையினால், தென்னாடு தமிழ்நாடு, தெலுங்குநாடு, கன்னடநாடு, மலையாள நாடு முதலிய பெயர்களைப் பெற்றன, ஆயினும் அவற்றுள் தமிழ்நாடு பெருஞ் சிறப்புடையது.

## தமிழ் நாடு

தெற்கே குமரி முனை தொடங்கி வடக்கே வேங்கடமலை வரையில் தமிழ் நாடு பரவியிருந்தது. இதன் கிழக்கிலும் மேற்கிலும் கடல்களே எல்லைகளாக இருந்தன. இத் தமிழ்நாடு பழந்தமிழ்க்குடி மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அம் மன்னர்கள் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவராவர்.

ஆகவே அவரவர்க்குரிய நாடு அவரவர் பெயரால் **சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு** என்னும் பெயர்களைப் பெற்றன. எனினும் **தொண்டை நாடு, நடு நாடு** என்னும் பகுதிகளும் தமிழரசர்களுக்கு உரியனவாயிருந்தன.

## தொண்டை நாடு

தொண்டை நாடு என்பது பவளமலையின் கிழக்கு, வேங்கடமலைக்கு தெற்கு, பிநாகி நதிக்கு வடக்கு, கீழ்க்கடலுக்கு மேற்கு என அமைந்துள்ள நிலப்பகுதியாகும். இதை,



*"மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்*
*ஆர்க்கும் உவரி அணிகிழக்கு—பார்க்குளுயர்*
*தெற்குப் பிநாகி திகழிருப தின்காதம்*
*நற்றொண்டை நாடெனவே நாட்டு."*

எனக் கம்பர் அறியவைத்தனர். இந்நாடு சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோது கிள்ளி வளவனுக்கு மகனாகிய **இளந்திரையன்** காஞ்சிமா நகரைத் தலைநகராக்கிக் கொண்டான். அவன் காஞ்சியம் பதியில்தான். அரியணை ஏறினன். அப்பதி பாலியாற்றின் வடகரையிலமைந்தது. நிலம், நீர், குடி ஆகிய மூவளனும் மிக்கது. தென்னை, வாழை முதலிய சோலைகளா லணிபெற்றது. பொய்யாத விளையுளையுடைய கழனிமிக்க காஞ்சியம் பட்டணம் வறுமையறியாத வாழ்வினர்க்கு உறைவிடமாயிருந்தது. வேளாண்மையே யன்றி நெசவுத் தொழிலும் அங்கு மேலோங்கித் திகழ்ந்தது.

இக்காலத்தும் காஞ்சியில் நெசவுத் தொழில் நேர்மையாக நிகழ்வதை நாமறிவோம். ஆதலினாலேயே. "காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிப் பிழைக்கலாம்" என்னும் பழமொழியும் வழங்குகின்றது. காலாட்டிப் பிழைத்தல் என்பது தறியைக் காலால் மிதித்தலாகும். பன்னூறு யாண்டுகட்கு முன்னரே காஞ்சி இத்துறையில் ஏற்றமுற்றிருந்தமை மணிமேகலை என்னும் சங்க நூலால் அறியலாம். அதில்,

*"கண் நுழை கல்லா நுண்ணூற் கைவினை*
*வண்ண அறுவையர் வளந்திகழ் மறுகு"*

கலையுடையது எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது காஞ்சி.

இத்திறங்களால் இசை பெற்ற காஞ்சிப் பதியை ஔவையார் கீழ்வருமாறு பாடியுள்ளார்.

"வையகம் எல்லாம் கழனியாய் வையகத்துள்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள் செய்யகத்துள்
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறே அந்நாட்டின் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப்புறம் எல்லாம் கட்டியுள்
தான் ஏற்றமான சருச்சரை மாமணியே
ஆனேற்றான் கச்சி அகம்"

இதிலிருந்து காஞ்சி நன்னகரின் கண்ணியம் உள்ளங்கை நெல்லிக்கனியாய் உணரப்படும்.

ஒரு நகரம் கண்ணியமுடையதென்றால் அங்குள்ள மக்களால்தான் என்பது சொல்லாமலே விளங்கும். அந்நகர மக்கள் கல்வி, அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றில் முதன்மையானவர்கள் என்பது வெள்ளிடைமலையாம். எனவேதான்

"தெண்ணீர் வயல் தொண்டை
நன்னாடு சான்றோருடைத்து"

எனப் பாடினார் ஒளவையார்.

சான்றோர் என்னும் சொல் நிறைந்தோர், மிக்கோர் எனப். பொருள் தருவதாகும். அதாவது கல்வி, அறிவு, ஒழுக்கங்களால் மிக்கோர் என்பது.

## 2. நற் பிறப்பு

### மெய்ப்பேடு.

இத்தொண்டை நாட்டின் தலைநகராகிய கச்சிப்பதியின் அண்மையில் உள்ளது **மெய்ப்பேடு** என்னும் சிறிய ஊர். மெய்ப்பேடு மிகச்சிறிய ஊரே எனினும் வளவயலுடையதாகலின் உழுவித்துண்ணும் வேளாண் மரபினர்க்குக் குடியிருக்கையாயிருந்தது. அங்குள்ளவர் பன்னெடு நாட்க



ளாகத் தொண்டை நாட்டினையே வாழ்விடமாகக் கொண்டவர்கள்; ஆகலின் தொண்டை மண்டல வேளாளர் என்னும் குலச் சிறப்புடையோ ராவார்கள். அவர்கள்

"கொல்லா விரதமொன்ற குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே"

என்றாற் போன்ற உயிர்க்கருணை குடிகொண்ட உள்ளத்து சைவ வேளாளர்களே.

### ஏழைக் குடும்பம்

மெய்ப்பேட்டு வேளாளர்களுள் மிக ஏழைக் குடும்பம் ஒன்றிருந்தது. அக்குடும்பத்தினர் **காளத்தியப்பர்**. அவர் **சிவகாமியம்மை** என்னும் இல்லக்கிழத்தியுடன் வாழ்க்கை நடத்தியவர். காளத்தியப்ப முதலியாருக்குச் சொந்த நிலமில்லை. பிறரிடம் பணிபுரிந்து வாழவும் அவர் விரும்பவில்லை. "**வயிறு வளர்க்கைக்கு மானமழியாது உயிர் விடுகை சால வுறும்**" என்பதே முதலியாரின் முதற்கொள்கை. "ஏற்பது இகழ்ச்சி" என்பதை அவர் என்றும் மறவாதவர். ஆதலால், பிறரைத் தொழுது தொண்டு செய்வதை மறந்து உள்ளதைக் கொண்டே உண்டு உவந்து வாழ்ந்திருந்தார்.

கணவன் வருவாய்க்குத் தக்க செலவு செய்து, காலங்கழிப்பவரானார், சிவகாமி யம்மையார். தமக்கேற்ற பதிவிரதையாகிய அவ்வம்மையாருடன் எவ்வாற்றானும் இசைந்து இனிதே காலங் கழித்தனர் காளத்தியப்ப முதலியார். அன்றியும் தோல்வற்றிச் சாயினும் சான்றாண்மை குன்றாமையே

தமது விரதமாகக்கொண்டு, போதுமென்ற மனதோடு பொறுத்து போக்கினர்.

## பிள்ளைப் பேறு

"பொன்னுடைய ரேனும் பொருளுடைய ரேனுமற்று
என்னுடைய ரேனும் உடையரோ — இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்"

என்னும் பாவிலிருந்து

இன்னடிசில் புக்களையும் தாமரைக் கைப்பூநாறும் செய்யவாய் மக்களை இங்குப் பெற்றார் பொன்னிலரேனும் பொருளிலரேனும் மற்று என்னிலரேனும் இலரோ என்னும் கருத்தைப் பெறுகிறோமன்றோ. அங்ஙனமே காளத்தியப்ப முதலியார் தமது வறுமை நோய்த் துன்பம் உணராமல் மறந்திருக்குமாறு ஒரு மகப்பேற்றைப் பெற்றார். அஃதும் ஆண்மகவாயிற்று. ஆகவே மகனாகிய செல்வத்தைக்கொண்ட அவர், பொருளாகிய செல்வமில்லாக் குறையை மறந்திருந்தார்.

"மக்கள்மெய் தீண்ட லுடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"

என்றபடி சிறுமகவால் பெரிதும் களித்திருந்தனர்.

"தம்பொருள் என்ப தம்மக்கள்"

என்ற வள்ளுவர் வாக்குப்படி தன் மகனே தனக்கு எல்லாமும் எனத் தந்தையார் கொண்டு உவந்தனர்.

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு தானே! ஆதலால், சிவகாமியம்மை தன் ஏழ்



மையை மறந்து மகனே வாழ்வெனக் கொண்டு மாமகிழ்வோடு வாழ்ந்தாள். ஏழை ஒருவனுக்கு உள்ள சிறுவியல் எங்ஙனம் கண்ணும் கருத்துமாய்ச் செப்பஞ் செய்யப்படுமோ அஃதே போல காளத்தியப்பர் மகனும் சீராட்டிப் பாராட்டி வளர்க்கப் பட்டான். படவே அவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தான்.

## படப் பாம்பும் மடப் பிள்ளையும்

ஒரே பிள்ளையை உற்ற செல்வமாகக்கொண்டு உவப்புடன் வாழ்ந்த சிவகாமியம்மை ஒரு நாள் நீர் முகந்துவரக் கொல்லைப்புறம் போயிருந்தார். அப்போது குழந்தை உறங்கிக்கொண்டிருந்தது. ஏழைக் குழந்தைக்குக் கட்டிலேது? தொட்டிலேது ஏனை கட்டத் துணிதான் ஏது? கிழிந்த, பழைய பாயில் கந்தைத் துணியில் கிடத்தப்பட்டிருந்தது அம்மகவு. தூக்கத்தில் இப்படியும் அப்படியுமாகப் புரண்டுகொண்டே வந்து புழுதி படிந்த தரையில் கிடந்தது அச்சேய். கொல்லைப்புறஞ் சென்ற சிவகாமியம்மை கதவைத் திறந்தபடியே விட்டிருந்தார்.

அவ்வீட்டுக் கொல்லையில் ஒரு புற்று இருந்தது. அதில் வசித்திருந்த நாகப் பாம்பு இரையின் பொருட்டு வெளிப்பட்டது. அங்குமிங்கும் ஊர்ந்துகொண்டிருந்த நாகம் வீட்டிற்குள் நுழைந்தது. இதற்குள் குழவியும் விழித்துக்கொண்டு கை, கால்களை அசைத்துக் கொண்டிருந்தது. நாகம் அதைக் கண்டு ஏதோ உணவெனக் கருதிக் கிட்டியது. ஆனால், குழவியின் கை கால் அசைவைக் கண்டு அஞ்சியோ, சினந்தோ படம் விரித்துத் தலைதூக்கி நின்றது. பாம்பின் படத்தைக் கண்ட பாலகன்

வண்ணப் படம் கண்டு மகிழ்வதேபோல் நகையாடித் துள்ளிக்கொண்டிருந்தான். பட அரவு குடைபோல் இருந்து மடப்பிள்ளையைத் திருவிளையாடல் காட்டிக்கொண்டிருந்து.

### நற்குறி

நீர் முகந்து திரும்பிவந்த தாய் படப் பாம்பையும் பாலனையும் பார்த்தாள்; பதறினாள்; அஞ்சினாள்; அலறினாள்; கலங்கினாள்; கதறினாள்; நடுங்கினாள்; நணுகினாள். நாகம் உடனே படத்தை அடக்கிக் குழந்தையைச் சுற்றிவந்து, திரும்பி, விரைந்து சென்று, அளையிற் புகுந்தது. அதுமுதல் தாய் மனமயக்கத்துடன் மகப் பக்கத்திலேயே அமர்ந்திருந்தாள். ஆயினும் அடிக்கடி அரவு மீண்டும் வருமோ எனத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தாள். அச்சமயத்தில் காளத்தியப்ப முதலியார் வந்தார். மனைவியின் முகவாட்டத்தைக் கண்டார். மருகிற் சென்று அமர்ந்தார். மனைவியார் நிகழ்ந்ததைக் கூறினார். அது கேட்ட முதலியார் அகமிக மகிழ்ந்தார். "ஆண்டவன் அருள் இது. நம் மகவுக்கு நற்காலம் பிறந்தது, நாகன் குடை கவிக்கப் பெற்றதால் நாட்டிற்கு நாயகமாய் வாழ்வான், நம் குடி புகழ் பெறும். கவலை ஒழிக. களித்திருக்க. இனி நம் துன்பமெல்லாம் ஒழியும்" என்றார். முதலியார் மொழிந்ததைக் கேட்ட சிவகாமியம்மை பேருவகையுற்றார். பிள்ளைக்கலி தீர்த்த **அரிய நாயகமே** எங்கள் வறுமைக் கலியையும் தீர்ப்பாயோ! எனக் கொஞ்சினார்; குலவினார்; உச்சி மோந்தார்; உள்ளங் குளிர்ந்தார்; மேலும் அன்பு மிகப் பூண்டார். அது முதலாகவே அக்குழவிக்கு அரிய நாயகம்



என்னும் பெயர் வழங்கலாயிற்று. அரிய நாயகத்தின் முகத்தில் புதிய ஒளி ஒன்று தோன்றிற்று. அக்கவினைக் கண்டவரெல்லாம் களிப்பெய்தினார். இப்பிள்ளை "முடிதாங்கிய மன்னர்போல கண்ணியமாய் வாழும்" எனக் கூறினார். இப்படி எவராலும் ஏத்தப்பட்ட அரிய நாயகம் ஐந்து வயது பையனானான்.

## 3. கலைஞானம்

### கல்வி பல கற்றல்

மெய்ப்பேட்டில் பிள்ளையார் கோவில் ஒன்றுண்டு. அதற்குப் பூசைபுரியும் வேதியன் பெயர் **நம்பியான்**. அவன் அடிக்கடி காளத்தியப்பர் வீட்டுக்கு வருவதுண்டு. வரும்போதெல்லாம் அரிய நாயகத்தை அகங் குளிர, முகங் குளிர, கண்ணும் குளிரக் கண்டு களிப்பான். கையிலெடுத்து மடியில்வைத்து மார்பிலணைத்து மட்டின்றி மகிழ்வான். வழக்கமாக வந்துகொண்டிருந்த நம்பியான் ஒருநாள் கையில் பிரசாதத்துடன் வந்தான். அதிற் கொஞ்சம் அரிய நாயகத்திடம் தந்தான். முதலியாரை நிமிர்ந்து நோக்கி, அவர் முகத்தில் தாண்டவமாடும் வருத்தக் குறியையும் கண்டான். "என்ன வருத்தமாயிருக்கிறீர்கள்? ஏதாவது தேவையோ? என்னிடத்தில் சொல்லலாமல்லவா?" எனப் பரிவுடன் கேட்டான். அப்போதுதான் அவர் அவனிடம் தம் மன வருத்தத்தை வெளிப்படுத்தினார். "அரிய நாயகத்துக்கு ஐந்து வயது முடிந்தது. கல்விப் பயிற்சிக்கு வழி தோன்றாமல் கலங்குகிறேன். அது தவிர வேறு துயரம் எனக்கு இல்லை" என்றார். உடனே நம்பியான், "அவ்

வளவுதானே! அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்; அவனுடைய படிப்பு என் பொறுப்பு. நாளை முதல் நானே வந்து என்னுடன் கோவிலுக்குக் கூட்டிச் செல்கிறேன். பாடமும் கற்பிக்கிறேன். பிறகு கடவுள் கருத்துப்போல் முடியட்டும். நம்மாலாவது யாதிருக்கிறது? நான் போய் வருகிறேன். வருத்தமற்றிருங்கள்'' என்றுரைத்து விட்டுச் சென்றான். நம்பியான் கூறியவாறே மறுநாள் தொடங்கி அரியநாயகனைக் கோவிலுக்குக் கூட்டிச் சென்று கற்பித்துவந்தான்.

''நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்''

என்றபடி, விநாயகனருளால் அரியநாயகம் அரும்பொருளேனும் ஒருமுறை கேட்டதைக் கேட்டவாறே உள்ளத்தமைத்துக் கொள்வாரானார். சிலநாள் கற்ற அவர் நாளடைவில் ஓதாதுணரும் திறம் பெற்றார். கணிதநூலில் பெருந்திறமுற்றார். அதோடு நில்லாமல் விற்பயிற்சி, வாட் பயிற்சி, மற்போற் பயிற்சி ஆகியவற்றிலும் தேர்ந்தார். சிலம்பக் கூடத்தில் இவருடன் பயிலும் பாலர்கள் அரிய நாயகத்தின் அரும்பெருந் திறன்களைக் கண்டு களிப்பார்கள். மெய்ப்பேட்டிலுள்ள மக்கள் அரிய நாயகத்தின் குண நலனையும், கல்வித் திறனையும், உடலுரனையும் கண்டு வியப்பெய்தினர். இப்படி

''மகன் தந்தைக் காற்றுமுதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்''

என்றபடி திகழ்ந்தான் அரியநாயகம்.

## பெரியார் மொழி

எல்லாப்படியாலும் நல்லார் பலராலும் பாராட்டப்பட்ட அரியநாயகம் ஒருநாள் மாலை வேளையில்



தன்னோடு ஒத்த சிறார் பலரோடும் விளையாடிக் கொண்டிருந்தான். ஆடிக்கொண்டிருந்த இளைஞர் எல்லாருள்ளும் அரிய நாயகமே நாயகமாய் மிளிர்ந்தான். அப்போது அவ்வழியே சென்றுகொண்டிருந்தார் ஒரு அந்தணப் பெரியார். அவர் காஞ்சிபுரம் அடைந்து ஏகாம்பரநாதனின் சேவை காண்பதற்காகச் சென்று கொண்டிருந்தார். அவருடைய பார்வை இளைஞர் கூட்டத்தின்மீது திரும்பியது. திரும்பிய நோக்கம் தெளியறிவும் திடவுடலும் கொண்டுள்ள அரிய நாயகத்தின்மீது பாய்ந்தது. அவர் நடப்பதை நிறுத்தினார். சிறார்களை நணுகினார். விளையாட்டைப் பார்த்துக் கொண்டு நின்றார். அவர் கண்ணும் கருத்தும் அரியநாயகத்தின் முகப் பொலிவையும் மனத் தெளிவையுமே நோக்கின. அதனால் அவருள்ளத்தில் அன்பு பெருக்கெடுத்தது.

''அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்''

என்பது பொய்யாகுமா. அதனால் அப்பெரியார் அரிய நாயகத்தை அருகிலழைத்தார். அரிய நாயகத்திற்கு இயற்கையிலேயே அடக்கமும் வணக்கமும் அணிகலன்களாக அமைந்திருந்ததனால் பெரியாரழைப்பிற் கிணக்கி நெருங்கி நின்றான். ''தம்பீ உன்னைக் காணும்போதே எனக்கு அன்பு பெருகுகிறது. இயற்கையிலேயே நீ திருவாளன். உனக்கு ஈடானவர் எவருமில்லை. உன் முகத்தில் அரசிலக்கணம் அமைந்திருக்கிறது. தோற்றத்தால் நீ திருமாலை ஒப்பாய். ஆதலால், உன் கைரேகையையும் காண விரும்புகின்றேன். எங்கே! காட்டு'' என்றார்.

அதே நேரத்தில் பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல் நம்பியானும் அங்கு வந்து சேர்ந்தான். பெரியவர் மொழியைக் கேட்டான். "அரியநாயகம், இவர் பெரியவர்; அதிலும் அந்தணர்; அன்பு மிகவுடையவர்; மேலும் உன் மாட்டு பேரன்பு கொண்டிருக்கின்றார். அவர் உடலிலக்கண நூல் வல்லாரென்பது அவர் மொழியால் தெரிகின்றது. அன்றியும் ரேகை நூல் தேர்ந்தவராகவு மிருக்கின்றார். உன் கையைக் காட்டு. அவர் சொல் கட்டாயம் பலிக்கும். "நலமிக்க நல்லார் சொற் கேட்பதுவும் நன்று" உண்மை யன்பர் உரைத்தவை உரைத்தாங்கு நிகழும்." என்றான். அரியநாயகம் அப்பெரியாரிடம் தன் கையைக் காட்டினான். அந்தணப் பெரியார் அவன் கையைப் பிடித்து உற்றுப் பார்த்தார். அவர்முகம் கதிரவனைக் கண்ட கமலம்போல் மலர்ந்து மகிழ்ந்தது மதுவுண்டு மகிழ்ந்த வண்டேபோல உளங்களித்தார். அக்கையைத் தமது இரு கண்களிலும் ஒத்திக்கொண்டார். மீண்டும் கண் இமை கொட்டாமல் பார்த்தார். "ஆ! அரியநாயகத்தின் கை அரிய கை; மேலும் பெரிய கை; நல்ல யோகம்; ராஜயோகம். யோகம் என்றால் இஃதல்லவா யோகம். அடாடா, நிறைந்த வயது, சிறந்த யோகம், மிகுந்த புகழ். பிறந்தால் இப்படியல்லவா பிறக்க வேண்டும்" என்றார். அப்போது நம்பியான் "அந்தணப் பெரியீர், தாங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லை. எப்போது? எப்படி? எங்கே? என விவரித்துக் கூறுங்கள்" என்றான்.

இப்போதே விரைவில் வருகிறது யோகம். ஆனால், இவன் உடனே விஜயநகரம் செல்லவேண்டும். அரியநாயகம் குப்பையில் புதைபட்ட



மாணிக்கம்போல மெய்ப்பேட்டி லிருந்தால் பயனில்லை. எப்படியும் இவனுக்கு எல்லா வகை யோகமும் வரக் காத்திருக்கின்றன" என மொழிந்து விட்டு, அரியநாயகத்தைப் பார்த்து "உனக்கு யோகம் வந்தால் எனக்கு என்ன தருவாய்" என்றார். "என் செல்வத்தில் பாதி தருவேன்" என்றான் அரியநாயகம். "உண்மையாகவா" என்றார் பெரியவர். "நான் சொல் தவறமாட்டேன்" என்றான் இளைஞன். "அது எனக்குத் தெரியும்; ஆயினும் எழுதித் தந்தால் நலம்" என்றார் அந்தணர். "ஆ! அப்படியே" எனச் சொல்லி, அப் பார்ப்பனர் கையிலிருந்த ஓலைத் துண்டு ஒன்றை வாங்கி "என் கையைப் பார்த்து யோகம் கிட்டுமெனக் கூறிய அந்தணர்க்கு, நான் யோகமுற்ற காலத்தில், அதில் பாதியைத் தருவேன்" என எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான். அங்கிருந்த சிறுவரனைவரும் அகம் மிக மகிழ்ந்தனர். அவனுக்கு வரப்போகும் செல்வம் தமக்கு வந்துவிட்டதாகவே கருதிக் களித்தனர். நம்பியான் பெற்ற இன்பத்திற்கு எல்லையில்லை. இன்பக் கடலின் எல்லை கண்டவனைப் போலானான்.

இப்படி நெடுநேரம் அங்குத் தங்கிவிட்ட அந்தணர் அரியநாயகத்தை வாயார வாழ்த்தினார். அனைவரிடமும் விடை பெற்றார். போகப் புறப்பட்டார். அப்போதும் அரியநாயகம் என்னை மறவாதே, என் சொல்லைப் புறக்கணிக்காதே. "பொருந்துவன போமின் என்றால் போகா" என்றாலும் நீ வாளா மெய்ப்பேட்டியிலேயே இருத்தல் நன்றன்று. விரைவில் விஜய நகரத்திற்குப் போ" எனக் கூறினார். போய்விட்டார். பின்னர் சிறிது

நேரத்திற் கெல்லாம் இளைஞர் கூட்டம் கலைந்தது. அவரவர் வீடு போயினர். அரியநாயகம் தன் இல்லம் சென்றான். நிகழ்ந்தவற்றைப் பெற்றோரிடம் புகன்றான். நம்பியானும் ஆண்டடைந்து அனைத்தும் கூறினான். அன்று தொடங்கி அரியநாதன் உள்ளம் விஜயநகரம் செல்வதையே நாடிற்று.

## முயற்சி

கொடிக்காய் கொடிக்குப் பாரமா? என்பது தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழிகளுள் ஒன்று. அதேபோல ஒருவேளை உணவும் வயிறு நிறையப் புசிக்கும் வகை யறியாத காளத்தியப்பரும் சிவகாமியம்மையும் தமது அரியநாயகம் 'விஜய நகரம் செல்லல் வேண்டும்' என்றதைக் கேட்டு இடி கேட்ட நாகம் போலாயினர். "வறுமையால் வருந்தும் எங்கட்கு இம்மைச் செல்வமா யிருந்த உன்னை விட்டுப் பிரிவதெப்படி? பிரிந்து உயிர் வாழ்வ தெப்படி? அது முடியவே முடியாது" எனக் கூறிவிட்டனர். ஆயினும் அரிய நாயகம் மறுநாளே நம்பியானிடம் தெலுங்கு படிக்கத் தொடங்கினான்: நம்பியானும் மிக விரைவில் தெலுங்கு மொழியைப் பேசவும் எழுதவும் படிக்கவும் அரிய நாயகத்துக்குக் கற்பித்தான். இப்போது சமஸ்கிருதம், தெலுங்கு என்னும் இரு மொழியிலும் தகுந்த அளவு அரிய நாயகம் பயிற்சி பெற்றான். கணக்கில் ஐயமறத் தேர்ந்திருந்தான். மற்ற வில், வாள், மல் ஆகிய முப்போரிலும் திறனுடையனானான். மீண்டும் ஒரு நாள் தன் பெற்றோரை அண்மி அரிய நாயகம் விடை கேட்டான். பழையபடியே பெற்றோர் மறுத்தனர். ஆனால், ஆவாரை யாரே அழிப்பார்? நினையாத முன்



வந்து நிற்பதும் இயல்பன்றோ? பொருந்துவன போமின் என்றாலும் போகுமோ? ஆகூழ் வந்தடுத்தது.

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்"

ஆகலான் அரிய நாயகம் பெற்றோரை மேலும் வற்புறுத்தினான். "அந்தணப் பெரியார் எனக்கு இராஜயோகம் வரப்போகிறது என்று உறுதியாய்க் கூறினார். பிள்ளையைப் பெறுவதும், வளர்ப்பதும், கல்வி கற்பிப்பதும் பெற்றோர் கடமை. அவற்றை முடித்தீர்கள். உங்கள் கடமை செவ்விதின் நிறைவுற்றது. இனி என் கடன் பெற்றோரைப் பேணல். இதுவரையில் இன்னல் பலவுற்ற உங்களை இன்பமுய்க்குமாறு இயற்றுவது என் கடமை யன்றோ! அன்றியும் வர இருக்கும் வாழ்வை நாமே மறுப்பதுபோல வாளாவிருத்தல் தகுமோ! தடைசெய்யாது தயவுகூர்ந்து விடை தந்தனுப்புங்கள்" என வேண்டினான். அதோடு நில்லாமல் நம்பியானும் முதலியாரைப் பல்லாற்றானும் தேற்றி

"தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

அங்ஙனமாகும் இன்பத்தைப் பெற மறுக்கின்றீர்கள். இன்றியும்

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

ஆதலால், அப்பேருவகைக்கும் நீங்கள் விருப்ப மற்றவர்கள்போல் தடுக்கின்றீர்கள். பிரிவாற்றாமை ஒன்றினால் அழியாவுடம்பாகிய புகழை உதறித் தள்ளலாமோ! மைந்தனுக்கு வரும் ராஜயோ

கத்தை மாதா பிதாக்கள் மாற்றுதல் தருமோ!. மனமிசைந்து வழி கூட்டுக. நானும் அரியநாயகத்தைப் பிரிய மனமின்றிப் பெரிதும் கவல்கின்றேன் எனினும் நம் கடைமை அவனை அனுப்புவதே. விரைந்து விடை தருக" எனப் பலவாறு தெளிவித்து அரிய நாயகத்தை விஜயநகரத்திற்கு வழி கூட்டி அனுப்பினன்.

பெற்றோர்பால் விடை பெற்ற அரிய நாயகம் பெரு மகிழ்வுடன் நடந்தான். வழியில் பசியாலும் நடையாலும் தளர்ந்து, உடல் மெலிந்து பலபகல் கடந்து விஜயநகரத்தை அடைந்தான்.

## 4. சென்றவிடம்

**விஜயநகரம்**

வடக்கே துங்கபத்திரை நதியின் தென்கரையில் விஜயநகரம் உளது. அந்நகர் மலைநாடென்றே சொல்லலாம். ஆதலால், மலைப்பாறைகளும் கற்றிட்டுகளும் குன்றுகளும் அங்கங்கே காணப்படும். ஆயினும் நீர் வளமிக்கது. அந்நகர் எல்லை ஏறக்குறைய எழுபது மைல் என்னலாம். அப்பரப்பில் எங்கும் நீர் வாய்க்கால்கள் உண்டு. அவற்றில் எப்பொழுதும் வற்றாது நீர் ஓடிக்கொண்டிருக்கும். ஆதலால், அந்நீர்ப் பாய்ச்சலால் வயல்கள் விளையுள் மிகத் தருவன. அங்கே விளைவன செந்நெல்லும், செங்கரும்பும், வாழையும், தெங்கும், கமுகும் ஆகியவாம். விளைபுலங்களே யன்றிக் கண்ணைக் கவரும் கவின்மிக்க பூஞ்சோலைகளும் பல அந்நகர்ப்புறங்களிலுண்டு.

விஜய நகரம் இராஜ வீதி, அமைச்சர் வீதி, அந்தணர் வீதி, படைத்தலைவர் வீதி எனப் பல,



பாங்காயமைந்தது. பல்லாயிரக்கணக்கான போர் வீரர்களை யுடையது அந்நகரம். அன்றியும் யானை, குதிரை ஆகிய இருவகைப் படைகளும் வேண்டிய அளவு அங்குண்டு. இச் சிறப்புக்களோடு அழகிய சித்திரப்பாடு அமைந்த அணி மாடங்களும் ஆலயங்களும் அரண்மனையும் வானளாவத் திகழ்ந்ததால் அந்நகர் அமராவதியோ என்னும் நிலையிலிருந்தது.

வேளாண்மை, கைத்தொழில், வாணிகம், ராஜாங்கம் ஆகிய பலதுறை அலுவல்கள் ஆங்குச் செவ்வனே நிகழ்ந்தன. ஆகலின், அவை பொருட்டு நாற்றிசையிலுமுள்ள பன்னாட்டு மக்களும் வந்து, தங்கி, திரும்பிச் செல்வர். அன்றியும் சேர, சோழ, பாண்டிய நாட்டு மக்களும் மைசூர் சமஸ்தான மாந்தரும் மற்றும் பல்வேறு நாட்டினரும் விஜயநகரத்திலிருக்கக் காணலாம். அவர்களிற் பெரும்பாலார் விஜயநகர மன்னரின் சேவைக்கென்றே வந்தவராயிருப்பர். எனவே, அந்நகரம் ஜனநெருக்க மிக்கதாகவு மிருந்தது.

**கணக்கு வேலை**

விஜய நகர ஆட்சியில் பல சிற்றரசுகள் இருந்தன. அவைகளை மேற்பார்க்கும் தலைவர் பலர் உண்டு. இப்போழ்து ஒவ்வொரு இராஜதானிக்கும் ஒவ்வொரு **கவர்னர்** உண்டு அல்லவா. அதே போல அந்த ஆட்சியிலும் உண்டு. ஆனால், அவர்களுக்குக் **கர்வலர்கள்** எனப் பெயர். அவர்கள் **கர்த்தாக்கள்** என்றும் கூறப்படுவர். சிற்றரசுகளை மேற்பார்க்கும் அதிகாரிகள் **மண்டலேசுரர்கள்**. அப்படிப் பல மண்டலேசுவரர்கள் அந்தச் சாம்ராஜ்யத்தின் கீழிருந்தனர். அவர்களுள் சிறந்தவர் **நாகம நாயக்கர்**. அவர் தென் பெரிய மண்டலத்தின்

தலைவர் ஆதலால், **தட்சிண மகாமண்டலேசுவரர்** எனப் பாராட்டப்பட்டனர்.

நாகம நாயக்கர் பெருஞ்செல்வர். மகாராயருக்கு அடுத்த கீழ்ப்பதவியாளர். அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர். கடவுட் பற்று மிகவுடையவர். அவருக்கு எல்லாச் செல்வங்களு மிருந்தும் மக்கட் செல்வமில்லா மனக்குறை ஒன்றிருந்தது. ஆதலால், அவர் எந்தச் சிறு பிள்ளையைக் கண்டாலும் அன்பு காட்டுவார். விஜயநகரத்தை யடைந்த அரியநாயகம் அதிருஷ்டத்திற் கேற்றவாறு அவரிடம் போய்ச் சேர்ந்தான். அவரும் அவனை இனிது வரவேற்றார். தம்மிடத்தில் கணக்கு வேலையில் அமர்த்திக் கொண்டார். நாகம நாயக்கருடைய நற்குணத்திற்கேற்ப அரியநாயகமும் உண்மையாக நடந்துகொண்டான். அவரது குறிப்பறிந்து செயலாற்றி வந்தான். "ஏவா மக்கள் மூவா மருந்து" என்பது ஔவையின் அமுதவாக்கல்லவா! "அறிவும், ஒழுக்கமும் நிறைந்த அரியநாயகத்துக்கு செயலாற்றுந் திறனும் செவ்விதின் வாய்த்தது மெச்சத்தக்கதே" என அடிக்கடி நாகம நாயக்கர் நவில்வதுண்டு. நாளடைவில் அரியநாயகம் நாகம நாயக்கருடைய முழு மனத்தையும் கவர்ந்தான்.

## தோழன்

அரிய நாயகம், வீட்டில் அடியெடுத்து வைத்தவுடன் நாகம நாயக்கருக்கு நற்காலம் பிறந்தது. மகப்பேறில்லா மனக் கவலை மறைந்தது. ஆண் பிள்ளை ஒன்றுதித்தது. அதனாலும் அரியநாயகத்துக்கு நன்மதிப்பு கூடிற்று. நாகம நாயக்கருடைய மனைவியார் முன்னிலும் பன்மடங்கு அரிய நாயகத்



திடம் அன்பு காட்டி ஆதரித்தார். அதற்கேற்ப நாயகம், நாயக்கருடைய குழந்தையின்பால் தனியன்பு கொண்டிருந்தான். நாயக்கருடைய குழந்தை நாளடைவில் வளர்ந்தது. பலமுறை நாயக்கர் காசிக்குச் சென்று, வரங்கிடந்ததின் பயனாகப் பிறந்த பிள்ளை என்னும் காரணத்தால், அக்குழவிக்கு **விசுவநாதன்** எனப் பெயரிட்டார்கள்.

விசுவநாதனும் இளமையிலேயே கல்விப்பற்று மிகவுடையனாய்க் கற்றான். அறிவு தெளிந்தான். அவன் பார்வைக்கினியவனாகவு மிருந்தான். ஆதலால், அவனை விஜயநகர மகாராயராகிய கிருஷ்ண தேவராயர் மகனைப்போல் கருதினார். சிறிது பருவமடைந்த பின்பு தம்மிடத்திலே அடைப்பைத் தொழிலில் அமர்த்திக் கொண்டார். விசுவநாதனும், அரிய நாயகனும் வயதில் ஏற்றத்தாழ்வுடையவர்களே எனினும் ஒத்த வயதுடையவர்களேபோல ஒற்றுமைப் பட்டிருந்தனர். அன்றியும் அறிவு, ஆண்மை, ஒழுக்கம் ஆகியவற்றிலும் ஒத்திருந்தனர். நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல் நாதனும் நாயகமும் உற்ற நண்பராயினர். ஏன்! உயிரும் உடலும்போல் ஒன்றுபட்டனர்.

## அரசூழியம்

மனம் ஒத்த இருநண்பரும் அடிக்கடி அரசவைக்குச் செல்வதுண்டு. செல்லும்போதெல்லாம் கிருஷ்ணதேவராயர் நாயகத்தை உற்று நோக்குவர். அவனிடமுள்ள அருங்குணங்களை ஊன்றிக் கவனிப்பார். அடக்கம், மலர்முகம், தெளிபார்வை, இன்மொழி, குறிப்பறிதல், ஏவாதியற்றல்

ஆகிய அரிய குணங்களை அவர் உள்ளபடி அறிந்தார். நாயகத்தைப் பார்க்குந்தோறும் ராயருக்கு உளம் குளிரும், உடல் பூரிக்கும், உவகை வளரும், புத்தன்பு பெருகும். இப்படியே நாளடைவில் நாயகம் இராயரின் முழு அன்பையும் கவர்ந்தான். நற்பொருள் கண்டு நயவாதார் யார்! இங்ஙனம் வியந்த தேவராயர் நாயகத்துக்கு ஏதாவது சிறந்த ஊழியம் தரவேண்டுமெனக் கருதியிருந்தார்.

## 5. கணக்கறிவு

### கண்ணளக்காததா கையளக்கும்?

நாகம நாயக்கர் அரசவை செல்லும்போதெல்லாம் அரியநாயகமும் செல்வதுண்டு. வழக்கப்படி ஒருநாள் தம் தலைவருடன் நாயகம் அரண்மனைக்குச் சென்றிருந்தார். விண்மீன்களினிடையே நிறைமதி நிலவுதல்போல அமைச்சர், வீரர், புலவர், ஏவலாளர் ஆகிய பல்லோரினிடையில் கிருஷ்ணதேவராயர் அரியணைமீதிலமர்ந்திருந்தார். நாயகம் ஒரு தூணைச் சார்ந்து நின்றிருந்தான். கிருஷ்ணதேவர் சபையில் உள்ளவர்களைப் பார்த்து "இன்று உதயம் நீராடும் பொருட்டு, அரண்மனைத் தடாகத்திற்குச் சென்றிருந்தேன். மலராத அரும்பு, தாமரையரும்பு ஒன்று நீரில் நின்றிருந்தது. அதன் தாள் முற்றிலும் நீரில் மறைந்திருந்தது. அம்மொட்டு நீர்க்கு மேலே தோன்றியது. மொட்டின் அளவு முக்கால் சாண் இருக்கும். நான் நீரில் குதித்தேன். அதனால் தோன்றிய அலை சென்ற வேகத்தில் மொட்டும் உடன் சென்றது. அது சென்ற தூரம் நான்கு சாணுமிராது. குறைவாகவே இருக்கும். அதனால் அரும்பின் நுனிவரையில் நீரின் மட்டத்தில் மறைந்துவிட்டது. அப்படியானால் நீரின் ஆழம் எவ்வளவிருக்குமென்று ஓர்ந்துரையுங்கள்" என்றார். அங்கிருந்தோரில் பலர் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். சிலர் இயன்றவரையில் முயன்று கணித்துக்கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் மனக்கேடு; ஏன் வீண்பாடு! என வாளாவிருந்தனர். வேறு சிலர் வானை நோக்கி வாய் திறந்து மனதுக்குள் யோசித்தனர். இப்படிச் சிறிது நேரம் சென்றது. எவரும் விடையிறுத்தாரிலர். கிருஷ்ணதேவர் ஒருமுறை வரிசையாகச் சுற்றிலுமிருந்தவர்களைப் பார்த்துக்கொண்டே வந்தார். பின்பு "விடை தருவாரில்லை" என்றார்.



அரிய நாயகம் அப்போது "தேவரீர் கட்டளையிட்டால் நான் விடை கூறுகிறேன்" என்றான். அவையிலிருந்தாரனைவருடைய பார்வையும் ஒருபடித்தாக அரிய நாயகத்தின்மேற் சென்றன. ஓ! அரியநாயகமா! சரி; இங்கே வா; என்னருகில் என்றார். நாயகம் அனைவர்க்கும் எதிரில் ராயரினருகில் வந்து நின்றான். "உன் விடையைக் கூறு" என்றார். நீரின் ஆழமும் தாமரைப்பூவின் காம்பளவும் தனித்தனி ஒன்பது சாண்" என்றான்.

விடையைக் கேட்ட வேந்தன் நீராழத்தையும் தண்டின் அளவையும் கண்டறிந்து வர வேலையாள் ஒருவனை யனுப்பினார். இதற்குள் சபையில் பலர் "விடை சரியே" என்றனர். "அஃதெப்படிச் சரியாகும்? இல்லை; இல்லை" என்றனர். சிலர் புகழ்ந்தனர், சிலர் வியந்தனர், சிலர் மனம் புழுங்கினர். இதற்குள் அளந்துவரச் சென்றவன் திரும்பி வந்து சேர்ந்து "ஒன்பது சாண்தான்" என்றான்.

## அரண்மனைப் பெரிய கணக்கபிள்ளை

"பொருந்துவன போமின் என்றால் போகா" அல்லவா! விஜய நகர சமஸ்தானத்துக் கணக்கப் பிள்ளை ஒருநாள் கணக்கை முடிவுகட்டத் தொடங்கினார். ஏதோ ஒரு பிழை இருந்ததனால் சரிப்பட்டு வரவில்லை. பலவகையிலும் ஆராய்ந்து பார்த்தார்; இடுபடவில்லை. என்ன செய்வார். மற்றும் பல கணக்கர்களையும் கூட்டிக் கொண்டு துருவத் தொடங்கினார். முயற்சி வீணாயிற்று. பல நாள் பாடு பட்டார்கள். விடுபட்ட புள்ளி புலப்படவில்லை. ஆதலால், கணக்கும் ஒத்திட்டு வரவில்லை. மகா ராயருடைய பார்வைக்குக் கணக்குப் போக வேண்டிய நாள் நெருங்கிவிட்டது. என்ன செய்வதெனத் தோன்றாமல் எல்லோரும் விழித்தார்கள். மனக் கலக்கத்துடன் முகம் வாடி யிருந்தார்கள்.

திடீரென்று அரிய நாயகம் அந்த வழிச் சென்றார். சென்றவர் கணக்கப்பிள்ளைகளைக் கண்டார். பெருங் கலக்கத்துட னிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தார். அவர்களை நெருங்கி "யாது காரணம் எல்லையற்ற இன்னலுற்றவர்களாகி யிருக்கின்றீர்கள்" என வினவினார். அவர்கள் உள்ளதை யுரைத்தார்கள். "இவ்வளவுதானே! இதற்காகவா இப்படி அஞ்சுகிறீர்கள்! எதோ கணக்கைக் கொண்டு வாருங்கள்" என அருகில் அமர்ந்தார். அவர்கள் தங்கள் தலைமேலிருந்த பாரம் இறங்கியதேபோல் கவலை தீர்ந்தார்கள். கணக்கை அரிய நாயகத்தின் பக்கலில் சேர்த்து ஒதுங்கி யிருந்தார்கள். சிறிது நேரத்தில் கணக்குகளை ஆராய்ந்து பிழையைக் கண்டுபிடித்துக் கொடுத்தார்.



அப்போது அக்கணக்கப்பிள்ளைகள் அனைவரும் அடைந்த மகிழ்வுக்கு மட்டில்லை. அரிய நாயகத்தின் ஆற்றலையும் உபகார குணத்தையும் கொண்டாடினார்கள். யாதொரு அச்சமுமின்றிக் கணக்கை இராயருக்குக் காட்டினார்கள். அன்றியும் நிகழ்ந்த செய்தியையும் இராயருக்கு இயம்பினார்கள். இதையறிந்த மகாராயலுகாரு அரிய நாயகத்தை அரசாங்கத்துப் பெரிய கணக்கப் பிள்ளையாக்கினார். இச்சிறப்பு, இடும் எடுப்புமற்ற நாயகத்துக்குப் பொருந்துவதேயன்றோ!

# 6. நகரறிந்த நன்மதிப்பு

## நவராத்திரி விழா

விஜய நகரில் ஒவ்வொரு யாண்டிலும் நவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெறும். அப்போது சத்தி பூசை நடத்திக் கடைசி நாள் காட்டெருமைப் பலியிடுவது வழக்கம். மகேசுவரி மகிடாசுரனை வதைத்தமை இப்படிக் கொண்டாடப்படும். (மகிடம்=எருமை) அரிய நாயகம் அரண்மனையில் பதவி பெற்ற யாண்டில் நவராத்திரி விழா தொடங்கப்பட்டது. வழக்கம்போல் காட்டிலிருந்து கடாவும் பிடித்து வரப்பட்டது. மற்றெல்லா யாண்டுகளிலும் பிடித்து வரப்பட்ட எருமைக் கடாக்களைக் காட்டிலும் மிகப் பெரியதாக அது இருந்தது. அன்றியும் பெரிதும் கொழுத்து சண்டித்தன மிக்கதாயும் இருந்தது. அதன் கொம்புகள் மிக நீண்டு இரு பக்கத்திலும் உடலைச்சார்ந்து வாலளவும் வளர்ந்திருந்தது.

நவராத்திரியின் கடைசி நாளில் வெட்டப்படும் பகடு ஒரே வெட்டில் இரு கூறாகித் தலை

வேறு முண்டம் வேறாகி விழ வேண்டும். அப்படியின்றித் தவறிவிட்டால் நாட்டுக்கும் அரசுக்கும் தீங்கு விளையுமென்பது அங்குள்ளார் கருத்து. ஆனால், இந்தப் பகட்டினை அப்படி வெட்ட வியலாது. ஏன்? இரு கொம்புகள் கழுத்தோடு பொருந்தியிருக்கின்றன. என் செய்வது? எப்படி வெட்டுவது? வெட்டி வீணாவதினும் விடுதலே நலம். வேறு கடாவையாவது பிடித்து வரலாமா? என்றெல்லாம் எல்லோரும் எண்ணியபடி பேசிக் கொண்டிருந்தார்கள். ஆயினும், வனம் சென்று மற்றோர் எருமைக் கடா பிடித்துக் கொணர்தற்கு ஏற்றவாறு நாளில்லை. ஆகவே, மகாராயலுகாருவும் மந்திரி திம்மரசும் நெடுகச் சிந்தித்துக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் அக்கூட்டத்திலிருந்த நாயகம் எழுந்து. "பலியிடும் இடத்தில் ஒரு சிறிய குழி வெட்டி, அதில் புற்களை நிறைத்து, அக்குழி கடாவின் முன்னங்கால்களுக் கிடையாமாறு நிறுத்தினால் அப்புல்லைத் தின்னமுயன்று கடா குனியும், குனிவதிலும் வாய் இரு முன்னங்கால்களுக்கிடையில் வருமாறு குனிவதனால் கொம்புகள் கழுத்தை விட்டு விலகி வானோக்கி நிற்கும். அத்தருணம் மிக வெளிதில் வீசிவிடலாம்" என ஒரு யுக்தியுரைத்தார்.

அரிய நாயகம் அறைந்த அவ் யுக்தியினை அமைச்சர் திம்மரசு கேட்டு "நன்று நன்று" என மகிழ்ந்தார். ஆயினும் கிருஷ்ணதேவராயர் சிறிது ஐயங்கொண்டார். இராயருடைய ஐயப்பாட்டினையறிந்த அரியநாயகம் மீண்டும் இராயரை நோக்கி "தாங்கள் கட்டளையிட்டால் நானே இப் பலிச் சடங்கை முற்றுவிப்பேன்" என்றார். பின்பு, இராயர் ஒருவாறு துணிந்து ஒப்புக்கொண்டார்.



இராயருடைய இசைவு பெற்ற அரியநாயகம் தாம் கருதியாங்கு குழியமைத்துப் புல் நிறைத்துக் கடாவைக் கொணர்ந்து நிறுத்தினார். நாயகத்தின் கருத்துப்படி கடா பெரிதும் புல்லைத் தின்னத் தொடங்கியது. நாயகம் கத்தியை எடுத்து ஒரே வீச்சு வீசினார். இமைகொட்டு நேரத்தில் கடாவின் தலை எறியப்பட்டது. உடல் மலைபோலக் கீழே சாய்ந்தது.

மிகவரியதாகக் கருதியிருந்த பலிச் சடங்கு மிக மிக வெளிதாக நிறைவேறியதுபற்றிக் கிருஷ்ண தேவராயர் கொண்ட களிப்புக்கு எல்லையில்லை. பலி தவறியிருந்தால் விஜயநகர ஆட்சிக்கே பழுது விளைந்திருக்கும். அப்பழுதுக்குப் பழுது விளைத்த அறிவு மிக்க அரிய நாயகத்தின் அருஞ்செயல் "காலத்தினாற் செய்த நன்றியாதலால் ஞாலத்தின் மாணப் பெரிது" ஆயிற்று.

இந்நன்றி என்றும் மறக்கற்பாலதன்று எனப் பாராட்டிப் பேசி, தமது கழுத்திலிருந்த முத்தாவளியைக் கழற்றி அரியநாயகத்துக்குச் சூட்டினார்; மலர் மாலையும் சூட்டி மதிப்பூட்டினார் இராயர். அமைச்சர் திம்மரசு எழுந்து அரிய நாயகத்தைத் தழுவி மகிழ்ந்தார். அங்குக் குழுமியிருந்த சீமான்கள் வாயார வாழ்த்தினார்கள்.

## கழலும் வாளும் கொண்ட தளபதி

வட நாட்டு மல்லனொருவன் பல மல்லரை வென்று வாகை சூடியவன்; மலையெனத் திரண்ட தோளன்; வீமனோ என வீறு பெற்றவன்; அரக்கரினும் அடல் மிக்கவன்; வீரக்கழல் தரித்து, வெற்றி விருதுகள் தாங்கி, வீரம் பேசி, விஜயநகர

மன்ன ரவைக்களம் வந்தான். "வடநாட்டு மல்லரை வாட்டினேன்; தென்னாட்டு மல்லரின் திறம் பார்க்க வந்தேன். எதிர்ப்பார் எவரேனு மிருப்பின் என்முன் நிற்க. இல்லையாயின் என் ஆற்றலுக்கேற்ற வரிசை வழங்குக" எனக் கொக்கரித்துப் பேசித் தோள்களையும் தொடைகளையும் குலுக்கி நின்றான். கிருஷ்ணதேவர் அவையி லுள்ள மல்லர்களை நிமிர்ந்து பார்த்தார்.

அவர்கள் மருண்டு பார்த்து வாளா விருந்தார்கள். பின்னர் இராயர் ஏனையோரை ஏறிட்டுப் பார்த்து "இவனை எதிர்த்து வெல்வோர் எவருமில்லையோ? இருந்தால் எழுமின்கள்" என்றார். எவரும் எதிர் மொழி கூறாமலும் எழுந்து வாராமலும் இருந்தாங்கிருந்தார்கள். ஆனால், இளஞ் சிங்கம் போலத் துள்ளி எழுந்து "இதோ நான் இருக்கின்றேன். தேவரீர் திருவுளங் கொண்டு விடையளித்தால் வென்று காட்டுகிறேன்" என்றார் அரியநாயகம்.

ஆர்த்தெழுந்த அரியேறு போன்ற அரிய நாயகத்தின் ஆண்மையையும் துணிவையும் கண்ட இராயர் என்றுமில்லாப் பேருவகை கொண்டார். "இயல்வது கரவேல்" என்றார். உடனே அரிய நாயகம் அரையில் கச்சை கட்டி, தோளும் தொடையும் தட்டி, ஆர்ப்புக் கொட்டி, மல்லனைச் சுட்டி "வருக; என்னுடன் பொருக" என்றார். அவையிலுள்ள அனைவரும் பரபரப்புடன் விழித்துப் பார்த்தனர். அடுத்த நொடிப் பொழுதில் அவைக்களம் சிலம்பக்கூட மாயிற்று. யானையும் சிங்கமும் எதிர்ப்பதேபோல் இருவரும் எதிர்த்து நின்றனர். தோளொடு தோளும் தொடையொடு



தொடையும் தலையொடு தலையும் மார்பொடு மார்பும் முதுகொடு முதுகும் தாக்கித் தத்தம் வல்லமை காட்டினாரிருவரும். பின்பு குத்து வரிசைகள் நிகழ்ந்தன. அதுவரையில் ஒருவரை யொருவர் விஞ்சியராகவோ தாழ்ந்தவராகவோ இல்லை. அதன் பின் வடநாட்டு மல்லன் வஞ்சனையாக வெல்லக்கருதி அரியநாயகத்தின் கையைப்பிடித்து ஈர்த்துத் தரையில் மோதினான். இரு கால்களையும் பிடித்துக் கிழித்தெறிய முயன்றான். கீழே விழுந்த நாயகம் கிளர்ந்தெழுந்து கிட்டினார் மல்லனை; பற்றினார் கைகளை; சுற்றினார் கறங்கு போல்; வீழ்த்தினார் தரையில்; முகத்திலும் மார்பிலும் மாறி மாறிக் குத்தினார். பிடரியிற் பெரிதுந் தாக்கினார். இடி இடி எனத் தம் தலையால் அவன் தலையை பிடித்தார்.

புலிவாய்ப்பட்ட புல்வாய்போல் அரியநாயகத்தினிடம் அகப்பட்ட வடநாட்டு மல்லன் வகைகெட்டான். உயிர்கொண்டு மீள்வதுண்டோ என ஐயுற்றான். ஆயினும் அவன் அப்பொழுதும் வெற்றிக்கே மிக முயன்றான். அரிய நாயகத்தின் கழுத்தைப் பற்றிக் கசக்கக் கருதினான். கண்டார் அரியநாயகம். உடல் வலி ஒன்றே கொண்டுள்ள இவனை அறிவுடன்கூடிய அடலால் அடர்த்தல் ஆகும் என அறிந்தார். மீண்டும் இடது கையால் அவனுடைய இரு கைகளையும் இறுகப் பிடித்தார். வலது கை கொண்டு புடைத்தார். கால்களால் எற்றிப் பந்தாடினார். பெருமரம் சாய்வதேபோல் அவன் கால் மாய்ந்து, கருத்து ஓய்ந்து, கண் சோர்ந்து கடிதில் சாய்ந்தான். சாய்ந்தவன் கயக்கண் முதலைவாய்ப்பட்ட களிறேபோல வாய்விட்டுக் கதறினான்.

வீழ்ந்து ஓலமிட்ட மல்லனை அரியநாயகம் அணுகி, இருகைகளாலும் வாரி, எடுத்து நிறுத்தி, தழுவிப் பிடித்து, நடத்திச் சென்று கிருஷ்ண தேவரின் அருகில் நிறுத்தினர். நிமிர்ந்து வந்த மல்லன் தலை குனிந்து நின்றான். அரியநாயகம் இராயரை வணங்கினர். இருவருக்கும் இருக்கை தந்து இருக்கச் செய்தார் இராயர்.

எவரும் களிக்க ஏறுபோல் வீற்றிருந்த அரிய நாயகத்தின் வலிமிக்க தோள்களில் மணமிக்க மலர் மாலைகள் வீழ்ந்தன. இராயர், நாயகத்தின் வெற்றிக்கு அறிகுறியாக வீரக்கழலையும் வெற்றி வாளையும் வரிசையாக வழங்கினர். அன்றியும் தளபதி உத்தியோகமும் தந்தார். அரியநாயகத் தின் விருப்பப்படி மல்லனுக்கும் சிறிது வரிசை தந்தனுப்பினர்.

## சோதிடர் புலமை

நவராத்திரி பலியினலும் மல்லமர் வெற்றியா லும் சிறப்புற்ற அரியநாயகம் கிருஷ்ணதேவராய ருக்கு ஒரு கண்ணாகக் கருதப்பட்டார். சில நாட்கள் சென்றன. இராயனுக்கொரு சிறிது பிணி வாய்ப்பட்டார். அரண்மனை வைத்தியர் மருத்து வம் பார்த்தனர். மருந்து கொடுக்கக் கொடுக்க நோய் வளர்ந்தது. இராயருடைய நிலைமை ஐயத் துக்கிடமாயிற்று. பெரிய வைத்தியரெல்லாம் பெரி தும் நாடிப் பார்த்து மருந்தீந்து நலங் காணது சோர்ந்தனர். இராயரும் தம் நிலைமையில் கவலை கொண்டுவிட்டார். அரசியார் அவலக்கண்ணீர் சொரிந்து அருகிலிருந்தார்.

அப்போது அரண்மனை சோதிடருள் திறமை வாய்ந்த சிலர் அழைக்கப்பட்டனர். அவர்கள் இராயருடைய சாதகத்தை ஆராய்ந்து பார்த்து விட்டு அயர்ந்திருந்தனர். அறுதியிட்டுக் கூறும் ஆற்றலில்லாமல், அமர்ந்திருந்தனர். அதனல், அரசரும் அரசியும் அச்சமிகக் கொண்டுவிட்டனர். உருகக் கண்ணீர் பெருக்கினர். அப்போது அங் கிருந்த அரியநாயகம் அரசருடைய சாதகத்தைக் கையிலெடுத்தார். பிறந்த நட்சத்திரத்தையும் இராசியையும் கொண்டு ஆராய்ந்தார். கோள் களின் சாரங்களைக்கொண்டு பலன் கூறத்தொடங் கினர். அரியநாயகம் யாது கூறுவாரோ என அரசரும் அரசியும் ஆவலோடு நோக்கியிருந்தனர். "தேவரீர் ஒரு சிறிதும் கவலைகொள்ளல் கூடாது. கிரகங்கள் வலுத்திருக்கின்றன. ஒரு வாரத்திற் குள் தாங்கள் உடல் நலனுறுவீர்கள். அதன்பின் தாங்கள் அடையப்போகும் கீர்த்தி மிகமிகச் சிறந் தது. இதில் ஐயம் வேண்டாம். தங்கள் நாடு பெருகும். அரசு செழிக்கும். வெற்றி வளரும். கவலையை விடுங்கள்; திடப்படுங்கள்" என்றார்.

அரியநாயகத்தின் அருஞ்சொற்கள் அரசி யாரின் காதுகளில் அமுதம்போல் பாய்ந்தன. அவர் அடைந்த அகமகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கிருஷ்ணதேவரும் கவலையை மறந்தார். அருகி லிருந்தவர்கள் அனைவரும் களிப்பெய்தினர்கள். அரியநாயகம் அவ்விதம் மொழிந்ததால் வைத்தி யரும் மனந்தெளிந்து தக்க மருந்துகளைத் தந் தார்கள். நாளடைவில் இராயர் நோய் தெளிந்து பழையபடி உடல் நலனுற்றார்.

அரசர் பிணியினின்றெழுந்த செய்தி நகர முற்றும் பரவியது. அரண்மனை ஊழியர்கள் அரிய நாயகத்தின் கணக்குப் பயிற்சியையும் சிலம்பப்

யையுஞ் சோதிடப் பயிற்சியையும் வேலைக் கேற்ற விவேகத்தெளிவையும் பற்றிப் பாராட்டிப் பேசினார்கள். ஞாயிற்றின் ஒளிபோல் நாயகத்தின் அறிவொளி நகரமாந்தரைக் களிப்பித்தது. ஆதலால், விஜய நகரமெங்கும் அரியநாயகத்துக்கு நன் மதிப்பு ஆயிற்று.

## 7. முதலியும் மந்திரியும்

### பல்லக்குவரிசை

"சுடர் விளக்காயினும் நன்றாய் எரிந்திடத் தூண்டு கோல் ஒன்று வேண்டும், அல்லவா! கிருஷ்ணதேவராயர் பிணி நீங்கிப் பெரிதும் குண மடைந்தார். அரியநாயகம் அறைந்தவாறு ஆயுள் நிலைத்தது. இனி நாடு பெருகுவதும், அரசு செழிப்பதும், வெற்றி வளர்வதும் எப்படி என எண்ணினார். தமது தந்தை மரணநோயிலிருக்கும் போது தம்மிடம் கூறிய செய்தி நினைவுக்கு வந்தது. அதாவது "மகனே, மனம் வருந்தாதே. என் பொருட்டுகொள்ளும் கவலையைக் குடிகளின் நன்மைக்காக்கு. அவர்கள் வாழ முயற்சி செய். அன்றியும் நம்பகைவன் பீஜப்பூர்சுல்தான். அவன் கொற்றத்தையடக்கு. அப்பகுதியை நம் ஆட்சிக்குக் கீழ் அடக்கு. இதை மறவாதே. இச் செயல் என் பொருட்டுச் செய். எங்கே! அதை நிறைவேற்றுவதாக வாக்குறுதி செய்" என்றார்; அதைக் கேட்ட கிருஷ்ணதேவர் "ஆ! அப்படியே செய்வேன். அரும்பாடுபட்டேனும் பீஜப்பூர்சுல்தானை வென்று அவன் நாட்டைக் கைப்பற்றுவேன், இதுதிண்ணம் தாங்கள் ஆறுதலடையுங்கள்" எனப்புகன்றார். அதைக்கேட்ட தந்தையார் முகமலர்ந்து உளமகிழ்ச்சியைக் காட்டினார்.



தந்தைக்குத் தந்தவாக்கு, தம்மால் நிறைவேற்றப்பட இஃதே இயைந்த சமயம் எனத்தேர்ந்தார். ராயச்சூரை நோக்கித் தம்படை புறப்படட்டும் எனக்கட்டளையிட்டார். தோள்தினவுற்றிருந்த வீரர்உடனே போர்க்கோலங் கொண்டனர். படைகள் அணிவகுக்கப்பட்டன. அரசர் அழகிய அசுவமேறி முன்னே சென்றார், அரியநாயகமும் அவர் போன்ற பலதளபதிகளும் அரசர்க்குப் பின் பரிதிமீதிவர்ந்து சென்றனர். அவர்களைத் தொடர்ந்து சேனைகள் நடந்தன.

விஜயநகரச் சேனை இராயச்சூரை யடுத்தது. அதனையறிந்த பீஜப்பூர் சேனையும் பெரிதும் கிளர்ந்தெழுந்தது. இராயச்சூருக் கண்மையிலே போர் தொடங்கப்பட்டது. இருதிறத்துப் படைகளும் இளைக்காமல் நெடுநேரம் எதிர்த்து நின்றன. மாண்ட வீரர் பலர், அழிந்த குதிரைகள் அளவற்றன. முறிந்த தேர்கள் எல்லையில்லன. எவரும் இளைக்கவில்லை. வீரக் கிளர்ச்சி மேலோங்கிக் களைப்பை மறைத்தது. வாள்கள் வான் மின்னலென ஒளி காட்டின. தலைகள் சூறைக்காற்றிலகப்பட்ட தெங்கங் காய்களெனச் சிதறின. பெருமழைப் பெருக்கெனக் குருதியாறு பாய்ந்தது. சுல்தானின் படைவீரர் பெரிதும் முனைந்து நின்றனர். ஆதலால், விஜயநகரப் படை தாங்காது தத்தளித்தது. சிறிது நேரத்தில் சிதறியோடவும் தலைப்பட்டது.

கிருஷ்ணதேவராயர் தமது படை பழுதுபட்டதைக் கண்டார். ஓடாதவாறு தடுத்தார். அதற்குள் மற்றொரு பெரும்படை துணைக்கு வந்து சேர்ந்தது. அதனால், சிதறிய சேனையும் திரண்டது.

மீண்டும் எதிர்த்து நின்று தாக்கியது. முன்னேறிக் கொண்டிருந்தது. அப்போருக் காற்றாது பீஜப்பூர் சேனை பின்வாங்கியது. அச்சேனைத்தலைவர்களுள் ஒருவனாகிய **சலபத்கான்** என்பவன் அஞ்சியோடுவதாகப் பாசாங்கு செய்தான். நெடுந்தூரம் ஓடிய அவன் அங்குள்ள ஒரு சேனையோடு பின்புறமாகவந்து இராயர் சேனையைத் தாக்கினான். பல வீரரை வீழ்த்திக்கொண்டே கிருஷ்ணதேவரைக் கிட்டிவிட்டான். கலங்காத வீரச் சிங்கமாகிய இராயர் எதிர்க்கத் தயாராயிருந்தார். தொலை தூரத்திலிருந்து பெரும்படை வந்துகொண்டிருந்தது. ஆயினும் சலபத்கான் கையில் இராயர் சிக்கும் நிலையில் இருந்தார்.

அரியநாயகம் அமர்க்களத்தில் அமையுமாறு போர் செய்யப் பயின்றவர். பகைவர் சூழ்ச்சிகளைப் பல்லாற்றானும் நுணுகி நோக்கும் நுண்ணறிவினர். பகைவரைத் தாக்கிக்கொண்டே பல திசைகளையும் பார்த்தறியும் பழக்கமிக்கவர். இராயருக்கேற்பட்ட இடையூறுணர்ந்தார். இமைகொட்டு நேரத்தில் ஏகினார். இராயருக்கும் கானுக்கும் இடை நின்றார். எதிர்பாராத வகையில் எதிர்பட்ட அரியநாயகத்துக்கும் இடு கொடுக்க வியலாமல் சலபத்கான் தயங்கினான். மான் கூட்டத்திற் பாய்ந்த புலிப்போத்தென அரியநாயகம் ஆர்ப்பரித்தார். அரை நொடியில் ஆயிரக்கணக்கான வீரர்களை அழித்தார். அலுப்பில்லாமல் சலபத்கானை அகப்படுத்திக்கொண்டார். அதன் பின்தான் இராயர் தமக்கு நேரவிருந்த நெருக்கடியையுணர்ந்தார். அதே நேரத்தில் பெரும்படை வந்து புகுந்தது.



சலபத்கானைப் பற்றி இர்த்துவந்த நாயகம் இராயர்முன் நிறுத்தினார். அவன் பெருவீரர்களிடம் ஒப்புவிக்கப்பட்டான். அவர்கள் அவனைச் சிறைப்படுத்தக் கூட்டிச் சென்றனர். அப்போது கிருஷ்ணதேவராயர் அரியநாயகத்தை அணைத்து, "அரியநாயகமே என் ஆவிகாத்தாய். பகைவரிடம் பட்டுப் பங்கப்படவிருந்த என்னைத் தப்புவித்த சிங்கமே நீயே என் நாதன். **அரியநாதன்** இன்று தொடங்கி உனக்கு **முதலி** என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது. அன்றியும் அரண்மனை அமைச்சுமாவாய்" என்றார். அண்டையிலிருந்தோரை நோக்கி இனி நமது அரியநாயகத்தை அனைவரும் அரியநாதமுதலியார் என்றே அழைக்கவேண்டுமென எங்கும் அறிவியுங்கள். அவர் அமைச்சர் பதவியும் பெற்றார் என விளம்புங்கள். விரைவிற் சென்று தக்கவரைக் கொண்டு பல்லக்கு வரிசையும் அளிக்கச் செய்யுங்கள்" எனக்கட்டளையிட்டார்.

அன்று தொடங்கி அரியநாதமுதலியாராகிய அமைச்சர் அரியசிறப்புக்களுடன் பல்லக்கேறும் பாக்கியங் கொண்டார். வெற்றி பெற்றுத் திரும்புங்கால் இராயருடன் எல்லாச் சிறப்போடும அரியநாதமுதலியார் வரவேற்கப்பட்டார்.

## 8. திருமணங்கள்

வாகைமாலை சூடி, வாள் பரிசு பெற்று, பல்லக்கும் கொண்ட அரியநாத முதலியாருக்கு திருமண யோகம் கூடிற்று. விஜயநகர இராஜ்யாதிபதி கிருஷ்ண தேவர் முன்னிலையில் அக் கடிமணம் நிறைவேறியது. அதன்பொருட்டுச் செலவான பணம் பத்து லக்ஷம் பொற்காசுகளாம். அந்த

மணவிழாவில் மண விருந்துண்ட வேளாளர்கள் நாற்பதாயிரம் பேர்களாம். அரண்மனையிலேயே அரசர் முயற்சியால் நடத்தப்பட்ட நன்மணத்தின் விருந்தும் இராஜபோஜனமாகவன்றோ இருந்திருக்கும். எல்லோரும் இனிது உண்டு உவந்தனர். அரியநாதரின் அணிமணங் கண்டு மகாராயர் மட்டற்ற மகிழ்வுற்றனர்.

அரியநாதருக்கு மணம் முடிந்த ஒரு மாதம் கடந்த பின்பு மெய்ப்பேட்டில் ஒரு மணம் நடந்தது. அரிய நாதருக்கு உடன்பிறந்தார் யாருமில்லை. அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த பங்காளிப் பெண்ணாகிய ஒரு தங்கை உண்டு. அத் தங்கையின் திருமணந்தான் அது. அரிய நாதர் அம்மணத்தைத் தாமே இருந்து மெய்ப்பேட்டில் நிகழ்த்தக் கருதினர். ஆனால், அவர் விருப்பப்படி முடியவில்லை. அரச காரியங்களை முதன்மையாயிருந்து செய்துவரும் அவருக்கு வேறெந்த வகையிலும் ஓய்வென்பதே இல்லாதிருந்தது. ஆதலால் அத்தங்கையின் திருமணத்திற்கு முதலியார் போகவில்லை. எனினும் உடன்பிறந்த தங்கை போல முதலியார் மணமகளை நினைத்திருந்ததற்கேற்பச் சிறந்த வரிசைகள் வழங்கினர். அவற்றின் பொருட்டுச் செலவான மொத்தத் தொகை இலட்சம் வராகன் (மூன்றரை லக்ஷம் ரூபாய்). அன்றியும் பொற்கலப்பை ஒன்றும் பொற் றூற்றுக்கோல் ஒன்றும் செய்து பெண்வீட்டுப் பொருளாக (ஸ்ரீதனம்) அனுப்பினர். அரிய நாதருடைய பேரன்பைக் கண்ட வுறவினரும் மெய்ப்பேட்டூரினரும் மிகப் புகழ்ந்தார்கள். கிருஷ்ண தேவராயருக்கு உயிர்க்குயிராயிருந்து உற்றவிடத்து உதவியாகப் பெருமதிப்போடு அரியநாதர் அரசாங்க



அலுவல்களைப் புரிந்துவந்தார். விஜயநகர மாந்தர்களுள் அரியநாதரை நேசிக்காதவர் யாருமில்லை. அவர்கள் அனைவருள்ளும் விசுவநாதனும் அரியநாதனும் உயிரும் உடலும் போல ஒற்றுமையுற்றனர். இவ்விருவர் ஒற்றுமை உண்மையில் கிருஷ்ண தேவராயரை மகிழ்வித்தது.

## 9. கடமை

### நாகமனும் நாயகனும்

தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய சோழ நாட்டு மன்னர் பலருள் வீரசேகரன் என்பவன் ஒருவன். அவன் காலத்தில் பாண்டியருள் சந்திரசேகரன் என்பவன் மதுரையில் இருந்து ஆட்சி புரிந்தான். இவ்விருவர்க்கும் திடீரென்று பகை மூண்டது. வீரசேகரன் வெருவி யெழுந்து சந்திரசேகரனை எதிர்த்தான். வெற்றி பெற்றான். தோல்வியுற்ற சந்திரசேகரன் தன் மகனுடன் மறைந்து வாழ வேண்டியாயிற்று. அப்போது அவன் மனத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. அதாவது விஜய நகர வேந்தராகிய கிருஷ்ண தேவராயரை அடைக்கலம் புகுந்தால் ஆட்சியை மீண்டும் பெறலாம் என்பதே.

சந்திரசேகரன் தன் மகனுடன் விஜயநகரம் நோக்கிப் புறப்பட்டான். உரு மறைந்து, மிக விரைந்து, காடுகளிற் புகுந்து, இரவுபகலாய் நடந்து விஜயநகரை யடைந்தனர். தந்தையும் மகனும், மகா ராயரைக் கண்டனர். வீரசேகரனுடைய கொடுஞ் செயலையும் படையெடுப்பையும் தங்களுடைய தோல்வியையுங் கூறித் தங்கட்குதவிபுரிய

வேண்டினர். அடைந்தவரை ஆதரித்தல் அரசருடைய கடமை. அதிலும் அகதிக் குதவுதலே பிறவிப் பயன் என்பதைக் கிருஷ்ணதேவர் கருதிச் செய்கிறவர். ஆதலால், சந்திரசேகரனுடைய சஞ்சலத்தையறிந்த மகாராயர் நாகம நாயக்கனை விளித்து "நீ நம் படையுடன் சென்று வீரசேகரச் சோழனை எதிர்த்து, போர்தொடுத்து, வென்று மதுரையை மீட்டு, சந்திரசேகரனுக் களித்து, முடியுஞ் சூட்டி வா" என்றார். இராயர் இது செய்தற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. அதாவது வீரசேகரன் விஜய நகரத்து வேந்தர்க்குச் செலுத்தவேண்டிய திறை சில யாண்டுகளாகக் கட்டப்படாமையே ஆகும்.

அரசர் கிருஷ்ணதேவராயருடைய கட்டளையைக்கொண்டு,படையுடன் புறப்பட்டான் நாகமன். அவன் நடத்திவந்த படையின்முன் சோழன் படை பஞ்செனப் பறந்தது. சோழனும் புறமுதுகிட்டான். மிக வெளிதில் மதுரையைக் கைப்பற்றினான் நாகம நாயக்கன். சந்திரசேகரனுக்கு முடிசூட்டினான். கிருஷ்ணதேவராயருடைய பிரதிநிதியாகவும் முதலமைச்சராகவும் சந்திரசேகரனுடனிருந்தான். சோழநாடு, பாண்டியநாடு, பிற தென்னாடு ஆகியவற்றின் ஆட்சிமுறையை மேற்பார்த்திருந்தான். அப்போது அவர் மனத்தில் ஒரு கருத்துத் தோன்றிற்று. உண்மையில் சந்திரசேகரன் தனியரசு செலுத்துந் திறமில்லாதவனே. இவனை மதித்துச் சிற்றரசர் எவரும் திறை செலுத்த மாட்டார்கள். அதன்பொருட்டு சந்திரசேகரன் எதிர்த்தால் தோல்வியே அன்றி வெற்றி யென்பதில்லை. ஆகவே, நாம் இங்கேயே இருப்போம்; விஜயநகர ஆட்சிக்கடங்கிய மதுரையின் வருவா



யைப் பெருக்குவோம். பல சீர்திருத்தங்களைச் செய்வோம். என்பதே அக்கருத்து. ஆனால், அதைச் சந்திரசேகரன் ஒப்புக்கொள்ளவில்லை. தன் இச்சையில் அரசு செலுத்த வெண்ணினான். இதைக்குறித்து, கிருஷ்ணதேவராயருக்குத் தெரிவித்தான். நாகம நாயக்கனும் இதை விளக்கி ஒரு கடிதம் எழுதி, தம்மிடத்திலிருந்த இராமபத்திர நாயக்கரிடம் கொடுத்தனுப்பினான். சந்திரசேகரனும் இராமபத்திரனும் முன்னும் பின்னுமாக விஜயநகரடைந்தனர்.

பாண்டியன் தன் குறையை இராயரிடம் தெரிவித்தான். அதைக் கேட்ட இராயர் இராமபத்திரனையும் விளித்தார். அவனும் தான் கொண்டுவந்த கடிதத்தைக் கொடுத்தான். மகாராயர் கடிதம் முற்றும் படித்தார். இராமபத்திரன் வாய்மொழியையும் கேட்டார். நெடுநேரம் சிந்தித்தார். மற்றுமுள்ள அமைச்சர் பலரிடமும் கலந்து பேசினார். "நமது கட்டளை சோழனிடம் மதுரையை மீட்டு, பாண்டியனிடம் தந்து மீள்க என்பதே. அதை நாகம நாயக்கன் மறந்தான். அல்லது இகழ்ந்தும் இருக்கலாம். எப்படியிருப்பினும் குற்றமே, இதன் பொருட்டு அவன் தண்டிக்கப்படவேண்டியவனே. இச்சபையில் உள்ளவர்களுள் இதைச் செய்யும் வல்லமையுடையவர் யாவர்?" என்றார்.

நாகம நாயக்கனுடைய வீரத்தையும் சிறப்பையும் கருதி எவரும் அரசர் விடைக்குப் பதிலாக யான் செய்வேன் எனத் துணிந்துகூற வியலாமல் இருந்தார்கள். பின்னும் சற்றுநேரம் தாழ்த்து "எவரும் இல்லையா? எனின் இனி யாமே செல்வோம்" என்றார். அவர் அப்படிச் சொல்லி வாய்

மூடுமுன், ஒரு வாலிபன் எழுந்து, தலை குனிந்து, துணிந்து நின்றான். அவன் யாவன் தெரியுமா? அவனே விசுவநாதன். இன்னும் என்ன! நாகம நாயக்கனுடைய வரப் புதல்வன்; அருமருந்தன்ன மகன். பெற்ற தந்தையுடன் கொற்றப் போர் விளைத்து முற்ற வென்றுவருவதற்கு "யான் இருக்கின்றேன்" எனக் கூறி நின்றான். அவனைப் பார்த்த இராயர் "யார் என் அன்புக்கு உரிய விசுவநாதனா? சரி" எனத் தலையசைத்தார்.

> "எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
> வேறாகும் மாந்தர் பலர்"

விசுவநாதன்மீது முழு நம்பிக்கையும் இராயருக்கு உண்டு என்றாலும் தந்தையைக் கண்டபோது தானாடாவிடினும் தன் சதையாடுமல்லவா! என்னும் பழமொழிக்கிணங்க மாறிவிட்டால், அப்போது நமது கருத்து முற்றுப்பெறாமற் போகவும் கூடும். ஆகவே அரியநாதனும் போதல் சாலச் சிறந்ததென மகாராயர் கருதினார். விசுவநாதனை மீண்டும் பார்த்து, "விசுவா! உன் விசுவாசம் நான் அறிந்ததே. அன்றியும் நினது வீரமும் நிகரற்றதுதான். எனினும் என்றும் இணைபிரியாதுன்னுடனிருக்கும் அரியநாதனுடன் செல்வது நலம்; அவன் சமயத்தில் உதவுவான். உன் கருத்து யாது" என்றார்.

"தேவரீர் இயம்பியது மிக நன்று; யான் அதைப் பெரிதும் விரும்புகிறேன்" என்றான் விசுவநாதன். உடனே படைகள் தயாராயின. சுத்த வீரர்களாகிய விசுவநாதனும் அரியநாதரும் படைகளை நடத்திச்சென்றனர். ஆயினும் அரியநாதர், தந்தைக்கும் மகனுக்கும் நேரவிருக்கும்



போரைத் தடுக்கவே பலப்பலவும் கருதிச் சென்றார். அவருடைய கருத்து முற்றுப்பெறவில்லை. நாகம நாயக்கனுடைய வெஞ்சினமே அதற்குக் காரணமாயிருந்தது. என் மகனும், என் சேவகனும் என்னை எதிர்ப்பதா! என்னும் எண்ணம் ஒன்றே அரியநாதருடைய முயற்சியை முறியடித்தது. போரைத் தடுக்கக் கருதியும் முயன்றும் வந்த அரியநாதர் போரைத் தொடுத்தார். நாகம நாயக்கன் படையை முறியடித்தார். நாகம நாயக்கர் படைப்பலமிழந்து தனிப்பட நின்றார். எனினும் தம் வீரமே துணையாக வெல்வதே கருதிக் கொக்கரித்து நின்றார்.

கோளரியன்ன கொற்றத்துடன் நிற்கும் தந்தையை விசுவநாதன் விரைந்து எதிர்த்தான். அரியேறிரண்டு அமர் தொடங்கியதுபோல அவ்விருவரும் அமர்ந்தனர். தன் மகன் தாக்கலுக்காற்றாது தலைகுனிந்து நின்றார் நாகம நாயக்கர். ஆகையால், விசுவநாதன் விரைவில் சிறைப்படுத்தினான். எனினும் இமைப்பொழுதுக்குள் அவன் மனம் இரங்கியது. இருகண்க்ளிலும் நீர்பெருக்கினான். இதற்குள் அரியநாதர் அங்குவந்து தம் தலைவரும் இன்னுயிர்த் தோழரின் தந்தையுமாகிய நாகமநாயக்கனைப் பணிந்து "கடமை பெரிது; ஆதலால், எல்லாமறிந்த தாங்கள் இதைக் குற்றமாகக் கொள்ளலாகாது" என வேண்டினார்.

> "நீர்க்கிழிய எய்த வடுப்போல மாறுமே
> சீரொழுகு சான்றோர் சினம்"

என்றவாறு நாகம நாயக்கன் சினம் ஆறினான். அரியநாத, நீங்களிருவருமே என்னை எதிர்க்க

வருவதென்றால் என்னென்று யானிதை யியம்புவது. வெறுத்தாலும் போமோ விதி.

> "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினுந் தான்முந் துறும்"

ஆதலின் ஆயது இது, "தீதும் நன்றும் பிறந்தர வாரா" அன்றே! சென்றதைப்பற்றிச் சிந்தனை ஏன்? ஆகவேண்டுவனவற்றை நாடுவோம் எனக் கூறிச் சிரைக்கிசைந்தனர். மனதை மறுத்தே இருவீரரும் பெருவீரனை விலங்கிட்டுக் கூட்டிச் சென்றனர்.

## 10. அரிய பரிசு

விசுவநாதரும் அவருடன் சென்ற அரியநாதரும் கிருஷ்ணதேவராயரிடம் விடைபெற்று மதுரையேகி பதினைந்து நாட்களாயின. என்னாயிற்றோ! எப்படியாயிற்றோ! எப்பொழுது வருவரோ! எனப் பலவாறு கருதி எதிர்நோக்கி யிருந்தார் இராயர். அடல் வீரர் மூவர் அசுவமிவர்ந்து வருகின்றனர் என்ற செய்தி இராயருக்கு எட்டியது. அவர் கொண்ட களிப்புக்கு எல்லையில்லை. பரபரப்புடன் அரண்மனை மேல்மாடியிலிவர்ந்து தென்திசையில் கண்ணுக்கெட்டிய தூரம் பார்த்தார். பார்த்தவர் மனம் பரவசப்படுமாறு காற்றினுங் கடுகிவரும் பரிமாக்கள் மூன்றைக் கண்டார். வெள்ளைப்புரவி யூரும் வேளாளத் தோன்றல் வலது புறமும் செம்புரவியூர்ந்த செம்மல் இடதுபுறமும் வர இவ்விருவரிடையே நாணத்தால் முகங்கவிழ்ந்து வரும் நாகம நாயக்கனை நன்கறிந்தார்.

இராயர் மீண்டுவந்து அவைக்களத்தமர்ந்தார். சிறிது நேரத்தில் வாயில் காவலர் வந்து "விசுவ



நாதர், அரியநாதர் ஆகிய இருவரும் வந்துவிட்டார்கள்" என்றனர். "உள்ளே வரட்டும்" என்றார் இராயர். அவர்கள் சென்று அரசர் ஆக்கினையை அறைந்தார்கள். அதுகேட்டு மூவரும் அவைக்களத்துள் புகுந்து, அரசரை வணங்கி, நின்றார்கள். நாகம நாயக்கன் நான்ற தலையுடன் நின்றான்.

வந்த வீரரை இராயர் நல்லாசி கூறி வரவேற்றார். "உங்களிருவருடைய உண்மைத் தொண்டு பாராட்டப்படும்" என்றார். பின்பு, நாகமனைப் பார்த்து, "நாகம நாயக்கரே, உமது பதில் யாது? நீர் செய்த குற்றத்திற்கேற்ற தண்டனையை நீரே கூறும்" என்றார். அவர் வாளாவிருந்தார். உடனே விசுவநாதன் இராயர் முகத்தைப் பார்த்தான். அதே நேரத்தில் அரியநாதரும் அவர் முகத்தைப் பார்த்தார். இருவர் நோக்கின் நோக்கத்தை யுணர்ந்த இராயர் நாகமருக்கு ஓரிருக்கை தருவித்தார். அரசர் கட்டளைப்படி நாகம நாயக்கர் அதில் அமர்ந்தார். பின்பு இராயர், "உங்கள் அருஞ்செயலுக்கு ஏற்ற பரிசு தர விரும்புகின்றேன். நீங்கள் வேண்டுவதியாது? விளம்புங்கள்" என்றார். உடனே அரியநாதர் எழுந்து, "அரசரேறே. எந்தலைவரும் தங்கள் ஆட்சியின் மகாமண்டலாதிபதியும் தலைசிறந்த வீரருமாகிய நாகம நாயக்கர் இதுபோது தங்களாணையை மீறிய குற்றம் செய்தார் என்றாலும் இதற்குமுன் அவர் தங்கள்பால் காட்டிய விசுவாசம் கருதி அவரைத் தங்கள் நிதிச்சாலைத் தலைவராக அமர்த்த வேண்டும். அஃதே எங்களுக்கு வேண்டிய பரிசு" என்றார். இராயர் ஏதும் மறாமல் "அங்ஙனமே ஆகட்டும்" எனப் பணித்தார்.

# 11. மந்திரியும் தளவாயும்

**தகுதி**

சந்திரசேகர பாண்டியன் அரசுகொண்டான். ஆயினும் முயற்சிக்கேற்ப நெடுநாள் ஆட்சி புரிதற்கின்றி ஆவி நீத்தான். அதன்பின் அவன் மகன் சுந்தர குமாரன் முடிசூடினான். அவனும் இரண்டு ஆண்டுகளே ஆட்சிபுரிந்து மறைந்தான். பாண்டியர் குடியில் அரசுக்குரியார் எவரும் இல்லை. பன்னாட்காளாகப் பாண்டியர் பிறவேந்தரால் படும் பாடுகளும் அவ்வப்போது விஜயநகர மன்னர்களுதவிபெற்று வாழ்வுறுவதையும் நகரமாந்தர்கள் அறிந்திருந்தார்கள். ஆதலால், விஜயநகர வேந்தர்க்குச் செய்தியனுப்பினார்கள்.

அப்போது விஜயநகர வேந்தர் கிருஷ்ண தேவராயர் இறந்ததால் அவர் மகன் அச்சுத தேவராயர் அரசராயிருந்தார். மதுரைநகர மாந்தர் அனுப்பிய செய்தியைக் கேட்டார் அச்சுத தேவராயர். உடனே அரியநாதரையும் விசுவநாதரையும் அழைப்பித்தார். இருவரும் வந்துசேர்ந்தார்கள். அப்போது இராயர் அவர்களைப் பார்த்து அரியநாதரே, விசுவநாதரே நீங்கள் இருவரும் இந்த விஜய நகர ஆட்சிக்கு இரு கண்களாகவிருக்கின்றீர்கள். என் தந்தையார் உங்களிருவரையும் உயிராகக் கொண்டிருந்தார். சுத்த வீரர்களாகிய உங்கள் அரிய வுழைப்பினாலேயே விஜய நகர அரசு வீறுபெற்று விளங்குகிறது. இந்த ஆட்சிக்கு நீங்கள் செய்த பேருதவியால் இன்று



தென்னாட்டிலும் நம் ஆணை சென்றுகொண்டிருக்கிறது. பாண்டிய நாட்டைப் பாண்டியர்க்குரிமையாக்கி நம் நாட்டிற் சேர்த்த பெருமை நாகம நாயக்கருடையதென்றாலும் பின்னர் அப்பெருமை உங்களைச் சார்ந்துவிட்டது.

மதுரையரசன் சுந்தர குமார பாண்டியன் இறந்தான். மதுரை ஆள்வாரற்றுக் கிடக்கின்றது. ஆனால், ஆட்சியுரிமை யில்லாதார் பலர் அதைக் கைப்பற்றக் கருதியிருப்பதாகவும் தெரிகிறது. ஆனாலும் நகரமக்கள் நல்லதோர் ஆட்சியை விரும்புகிறார்கள். ஆட்சியுரிமையும் ஆளுந்திறமையு மில்லாதவருடைய கைப்பட்டுக் கலங்க மதுரை மக்கள் விரும்பவில்லை. எனவே நம் உதவியை நாடுகிறார்கள். அன்றியும் தென்னாடு முற்றிலும் நம் ஆட்சியில் வருவது நமக்கும் பெருமையே. இவ்வகையில் பலவும் கருதினேன், மதுரை மாந்தர்க்கு நன்மையும் நமக்கு நாட்டுரிமையும் பெருமையும் நிலைப்பதற்கென்று ஒரு முடிவுசெய்துள்ளேன். அதாவது நீவிர் இருபேரும் தென்னாட்டு ஆளுகையை ஏற்பதே.'' என்றார்.

அச்சுதராயர் மொழியை அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்த இருவரும் ஒருவரையொருவர் நோக்கினர். அவர்கள் முகக்குறிப்பை இராயர் உணர்ந்தார். அகத்தின் அழகு முகத்தில் தெரியும், என்றவாறு அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சத்து நினைத்ததைப் புலப்படுத்தியது முகம். ஆயினும் அவர்கள் மொழியும் கேட்போம் என வாளாவிருந்தார். விசுவநாதர் எழுந்து வேந்தே ஆட்சிக்கு இன்றியமையாதது சூட்சித் திறன். அதனோடு ஆளிமொய்ம்பும் வேண்டும்

எதிர்த்தவரை அடக்க இவ்விரண்டிலும் நிகரற்றவர் அரியநாதர். அவரே தென்னாட்டு மன்னவதற்கேற்றவர். தங்கள் கருத்தாயின் நானும் அவருடனிருந்து ஆவன புரிவேன்'' என்றார்.

அச்சுதராயர் அதைக்கேட்டு உவகையுடன் புன்முறுவலரும்பினார். அவர் பார்வை அரியநாதர் மீதேகியது. அக்குறிப்பையறிந்த அரியநாதர் எழுந்து, அரசே, நமது விசுவநாதர், ஒரு மகாமண்டலேசுவரராகிய நாகம நாயக்கர் மகன். தந்தையைப்போலவே தறுகண்மை மிக்கவர். தளராமுயற்சியும் வாய்ந்தவர். யானோ வேளாண்மரபிற் பிறந்தவன். அதற்கேற்பச் சேனைத்தலைமைக்குரியவன் அதையே ஏற்று அவருடன் இருந்து வருவேன்'' என்றார்.

அச்சுதராயர் முன்னினும் மகிழ்ந்தார். சரி; சரி. எனத்தலையசைத்தார். விசுவநாதனே மதுரைக்கு வேந்தனாகட்டும். நமது பிரதிநிதியாக இருக்கட்டும், அவருடன் அரியநாதன் அருந்துணையாயிருக்கட்டும், இதுவரையில் மதுரையரசில் **தளவாய்** என்றும் **பிரதானி** என்றும் இருபெரும் பொறுப்பாளர்கள் உண்டு. அவர்களுள் தளவாய் படைத்தலைவர், பிரதானி மற்ற அலுவல்களைப் பார்க்கும் பெருந்தலைவர். இவ்விருபதவியும் அரியநாதர் ஒருவர்க்கே கொடுக்கப்படும். இனி நீங்கள் சென்று மதுரையரசை ஏற்று நடத்துங்கள்'' என்றார்.

அரசன் கட்டளைப்படி இருவரும் இசைவு கொண்டார்கள். விடைபெற்றுச் சென்று நாகம நாயக்கரிடம் நவின்றார்கள். அவரும் அதன்



பொருட்டு அளவிலா மகிழ்வுகொண்டார். விசுவநாதா, அரியநாதனை அமைச்சனாகவும் தளவாயாகவும் பெற்ற நீ பெருமதிப்புறுவாய். எக்கவலையுமின்றி இனிது வாழ்வாய். இசை மிகப் பெறுவாய். அரும்பெறற் பிறவியையுடைய அரியநாதரை உன் உயிராக மதித்து ஒழுகு'' என்றார். பின்னும் அரியநாதரைப் பார்த்து ``விசுவநாதனுக்கு விளையும் எதுவும் உன்னால் என்றே கருதுகிறேன். நீ விஜயநகரம் வந்தது முதல் இந்நகரத்துக்கே பெருஞ் சிறப்புண்டாயிற்று. மேலும் இந்தச் சாம்ராஜ்யம் எல்லா வகையிலும் ஏற்றமுற்றது. விஜய நகர அரசர்க்கு வெற்றிக்குமேல் வெற்றி விளைந்தது என்றால் உன்னால்தான் என்பதை எவருமறிவர். இனி இந்நகரம் உன்னைப் பிரிவதென்றால் ஒரு குறையுற்றதென்றே கூற வேண்டும். ஆனால், மதுரையும் பாண்டிய நாடும் எவ்வகையிலும் சிறப்புறும் காலம் வாய்த்தமையால் உன்னை ஏற்கிறது. கிருஷ்ண தேவராயரையும் அச்சுத தேவராயரையும் ஆக்கும் வகையில் நீ கொண்ட உண்மையுழைப்பையும் அதன் பயனையும் நானறிவேன். பல சொல்ல வேண்டுமோ! என்னை எதிர்த்து நின்ற உறுதியும் சலபத்கானை ராயச்சூர் போர்க்களத்தில் தாக்கிய திறமையும் சான்று சாற்றும். எப்படியும் இனி விசுவநாதன் உன் காப்பில் அமைந்தவன். ஏற்றவை புரிவதுன் கடமை. பதவி கிடைப்பதினும் அதனை ஏற்பதினும் செவ்விதின் ஆற்றுதலே அரிதும் பெரிதும் ஆகும், உங்களிருவருடைய குறிக்கோளதுவாக வேண்டும், இனிப் புறப்படுங்கள்'' என்றார்.

வேந்தனிடத்திலும் ஏனையோரிடத்தும் விடைபெற்று விஜயநகரின்று வெற்றிவீர ரிருவரும்

புறப்பட்டார்கள். விரைவிலேயே மதுரையை யடைந்தார்கள். அந்நகரத்தார் அவர்களை அக மகிழ்ந்து வரவேற்றார்கள். உடனே முடிசூட்டு விழாவுக்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விசுவநாதருடைய முடி புனைவுத் திருநாள் பெருஞ் சிறப்பாக நடந்தது. அவர்க்குப் பொன் முடி சூட்டுதற்கு அரியநாத முதலியாரே தக்கவ ரெனப் பலரும் பகர்ந்தனர். விசுவநாதனுடைய விருப்பமும் அதுதான். அதனை யறிந்த அரிய நாத முதலியார் தாமே தமது நண்பர்க்கு முடி கவித்தார். செங்கோலைக் கரத்திலளித்தார். அதே நேரத்தில் அரிய நாதருடைய முதலமைச்சர் பதவியையும் தளவாய்ப் பதவியையும் அரசர் வழங் கினார். அங்குள்ளார் அனைவரும் தகும்; தகும்; என்றனர். தமிழ் நாட்டிற் பிறந்த அரியநாதர் வடநாட்டிற் சென்று, தமது சேவையால் நலம்புரிந் தார். இயற்கையன்னை அவருடைய தொண்டு தமிழ் நாட்டுக்கு ஆகவேண்டும் என்று கருதியதா லேயே அரியநாதர்க்கு மதுரை மந்திரித் தலைமை யும் படைத் தலைமையும் வந்துற்றது என எல்லோ ரும் பாராட்டினர். அரியநாதர் அரசின் முழு பொறுப்பையும் ஏற்றார்.

## செயல் திறம்

விசுவநாதன் மதுரை மன்னனாகி விஜயநகர ராஜப் பிரதிநிதியாக இருந்து சோழநாட்டையும் மேற்பார்த்து வந்தான். அச்சமயம் பாண்டியநாடு மிக்க சீர்கேடுற்றிருந்தது. காரணம் முகம்மதிய படையெடுப்பே யாகும். தான் ஆட்சிப் பொறுப் பேற்ற நாடு நன்னிலையுறுவதற்கான வழி பலவற் றையும் விசுவநாதன் ஆராய்ந்தான். அரியநாத



ரிடம் கலந்தான். ஆவன புரிகவென அவர் திறத் தில் ஒப்புவித்தான்.

கடமையை நிறைவேற்றுவதில் அரியநாதர் இளமை முதலே கண்ணியமானவர் என்பதை நாமறிவோம். ஆதலாற்றான் கிருஷ்ணதேவராயர் அச்சுதராயர் ஆகிய இருவேந்தரின் பேரன்பைப் பெற்றார். அதுமாத்திரமோ! வளர்பிறைச் சந் திரனேபோல பெரும் பதவிகளைப் படிப்படியாகக் கொண்டார். மாரிக்கால வெள்ளம்போல அவர் வாழ்வு மேலும் மேலும் பெருகியது. குன்றின்மே லிட்ட விளக்குப்போல எண்டிசையிலும் அவர் புகழ் பரவியது.

> "ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
> ஊக்கம் உடையான் உழை"

என்பதற்கு இலக்கியமாயினார் அரியநாதர்.

இளமைப் பழக்கம் சுடுகாடுமட்டில் அல்லவா! எனவே தமது தளராத ஊக்கத்தைத் துணையாகக் கொண்டு செயலில் இடுபட்டார். முகம்மதியர் படை யெடுப்பினால் நிலைகெட்டுத் தலை தடுமாறிய பாண் டிய நாடு பல்லாற்றானும் இழிவுற்றிருந்தது. கள்ள ரும் மறவரும் கண்ட கண்ட இடங்களில் கலகம் விளைத்தும், கொள்ளையடித்தும் குடிகளை அலைத்து வந்தனர். அதனால், அழிந்த குடும்பங்கள் பல; மக்கள் அச்சமற்று வாழுதற்கின்றி மாழ்கிக் கிடந் தனர். அதையே முதற் குறியாக வைத்துக் கொண்டார் அரியநாதர்.

கள்ளக் கூட்டத்தார் 'பதுங்கி யிருப்பதற் கேற்ற காடுகள் காவிரியின் இரு கரைகளிலும்

அடர்ந்து செழித்துப் பரவியிருந்தன. அக்காடுகளை அழிக்கும் அலுவலை முதலிற் றொடங்கினர். அதனால் அநேகருக்கு வேலையும் கூலியும் கிடைத்தன. மற்றவர்களை வருத்துதற்கு நேரமும் இல்லாமற் போயிற்று. உழைத்து ஊழியம் பெற்று வயிறாரப் புசிக்க வாய்ப்பு கிடைக்கவே பிறர்பொருள் கவர்தலாகிய கொள்ளையை அறவே மறந்தனர். கூட்டங்கள் கலைவதற்கும் இஃதோர் காரணமாயிற்று. பின்னர் செப்பஞ்செய்யப்பட்ட காவிரி நதிக்கரைகளில் ஆங்காங்கே ஊர்களைச் சமைத்தார். அந்தணர்களை அங்குக் குடிபுகச் செய்தார். ஊர்க் கழகுதரும் கோவில்களை அமைத்தார்.

## ஆலயப் பணிகளும் திருத்தங்களும்

அரியநாதர் கடவுட்பற்று மிக்குடையவர். மக்களை நன்னெறிப்படுத்தும் நோக்குடையவர். மத வேறுபாடும், சாதி வேற்றுமையும், நாட்டுப் பகையும் அவரிடமில்லை. தொண்டைநாட்டிற் பிறந்து ஆந்திர நாட்டிற் புகுந்து தென்னாட்டுத் தலைமை பெற்றவராகலின் மொழி வேறுபாடும் இல்லாதவரா யிருந்தார். நாட்டுச் சீர்திருத்தக் காரணமாகப் பல விடங்கட்கும் செல்வது அரியநாதர்க்கு வழக்கம். அப்படிச் செல்லுங் காலங்களில் திருவரங்கத்தின் வழியாகவே பெரும்பாலும் போவார். போகும் போதெல்லாம் அங்குள்ள பெரிய கோவிலைக் கண்டு மகிழ்வார். திருமாலைப் பாடிப் பரவுவார். ஆதலால், அரங்கநாதர் கோவிலைப்பற்றி அடிக்கடி நினைப்பார். அப்படி நினைப்பதற்கேற்ற காரணமும் ஒன்றுண்டு. அதாவது அக்கோவில் பல விடங்களில் பழுதுபட்டிருந்தது. அப் பழுதுகளைச் செப்பஞ் செய்தார். அவ்வாறே திருவானைக்கா



திருக்கோவிலையும் புதுப்பித்தார். இருகோவில்களுக்கும் இன்றியமையாத திருப்பணிகள் பல புரிந்தார்.

மாலிக்காபூர் முதற்கொண்டு பல முகமதியர் சூறைக் காற்றெனப் படையுடன் சுற்றிவந்ததால் துகள் பட்டுக்கிடந்த மதுரை கோவிலின் புறமதிலைத் தகர்த்துப் பெரிய மதிலைப் புதிதாக வெழுப்பினர். அக் கோவிலி னுள்ளிருந்த பல மண்டபங்களையும் பாங்குறச் சமைத்தார். கோவிலின் பூசனைக்குரிய பொருள்வருவாயின் பொருட்டு ஊர்கள் சில ஒதுக்கிவிட்டார்.

அதன் பின்னர், அரசிருக்கையாகிய மதுரை மாநகரை மாண்புறச் செய்யும் கருத்துக்கொண்டார். மதுரைக்கு மிகப் பழமையான புறமதில் ஒன்றுண்டு. அது காலங்கண்டதாகலின் சிதைந்து கிடந்தது, அதனைச் சீர்திருத்தினர். எட்டு வாயில்கள் வைத்தார். எழுபத்திரண்டு கொத்தளங்களை நிறுவினர். ஆதலால், மதுரை பகைவ ரச்சமற்றுப் பாங்குற்றது. இவ்வகை சீர்திருத்தப் பணிகளை அவ்வப்போது கண்டும், கேட்டும் அறிந்த விசுவநாத நாயக்கர் வியப்பும் உவப்பும் கொண்டார். அரியநாதர் கொண்டுள்ள அக்கரைக்கும் அருந்திறலுக்கும் அணுவும் தியக்கம் ஏற்படாத வகையில் விசுவநாத நாயக்கர் இசைந்து வந்தார்.

## தருதலும் பெறுதலும்

விசுவநாத நாயக்கர் பாண்டிய மண்டலத்துக்குப் பிரதிநிதியா யிருந்தார். ஆனால், சோழமண்டலமும் அவர்க்குட்பட்டிருந்தது. ஆகவே இரு மண்டலங்கட்கு ஒரு பிரதிநிதியாக விருந்தார் விசுவநாதர்.

அரியநாதர் அதனினும் மிக்க பொறுப்புள்ளவர் என்னலாம். எப்படி யெனில் தமிழ் நாட்டு ஆட்சி முறைப்படி ஒவ்வொரு மண்டலத்துக்கும் ஒருதளவாய், ஒரு பிரதானி (அமைச்சு) என இருவர் இருப்பர். தளவாய் படை ஆட்சியையும் பிரதானி குடியாட்சியையும் கொண்டு நடத்துவர். ஆகவே சோழ மண்டலம் பாண்டி மண்டல மென்னும் இரு மண்டலங்கட்கும் நால்வர் இருந்து ஆற்ற வேண்டியிருக்க அரியநாதர் ஒருவரே இருந்தாற்றி வந்தார். சீர்மையாய் ஆற்றிவந்தார் என்பதே. எனவே அச்சுதராயர் அரியநாதருடைய அருஞ் செயலாற்றும் திறனையறிந்தே அங்ஙனம் ஆக்கியிருப்பார் என்பதில் ஐயமில்லை.

அச்சுத நாயக்கருக்கு ஒரு மைத்துனன் இருந்தான். அவன் இராயருடைய அன்புக்கு உரியவன். அவனுடைய பெயர் **சேவப்ப நாயக்கன்.** அவனைச் **சிவப்பன்** எனவும் கூறுவது வழக்கம். அவன் கல்வி, அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவன். அச்சுதராயரிடம் அளவுகடந்து பற்று கொண்டவன். அவனுக்குத் திருமணம் நிறைவேறியது. அப்போது அச்சேவப்பனுக்குச் சீதனமாகப் பொருள்தந்து சிறப்பும் தரவேண்டுமென வெண்ணினர் இராயர். ஆதலால், பாண்டிய நாட்டுக் குட்பட்டிருந்த சோழ நாட்டைப் பிரித்தார். சேவப்பன் இடம் ஒப்புவித்தார். பிரதிநிதியாக்கி முடிசூட்டிவைத்தார். தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரியுமாறு கட்டளையிட்டார். அக் கட்டளைப்படி சேவப்பன் சிறப்பாகச் சோழ நாட்டை ஆண்டுவந்தான். விசுவநாத நாயக்கர் பாண்டிய நாட்டுத் தலைமைப் பதவிபெற்ற நாள்



தொடங்கித் திரிசிரபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆளவேண்டும் என்பது விருப்பம். தமது விருப்பத்தை அவர் அடிக்கடி அரியநாதரிடம் அறிவிப்பார். ஆவன செய்யுமாறு கூறுவார். அன்றியும் திரிசிரபுரம் சோழநாட்டுக் குட்பட்டிருப்பதால் நாட்டு எல்லை பிரிப்பதற் கியலாத வகையில் சிறிது தடையு மிருந்தது. இவற்றைச் சேவப்ப நாயக்கனிடம் நேரில் கூறிவருமாறும் செப்புவார்.

விஜயநகர சாம்ராஜ்யத்தில் கிருஷ்ண தேவ ராயர் காலமுதல் அரியநாதருக்கு இருந்த பெரு, மதிப்பைச் சேவப்ப நாயக்கன் அறிந்தவனாகலின் அவர் சென்றால் தடை கூறமாட்டான் என்பதும் விசுவநாதருடைய எண்ணம். ஆகவே அரியநாதர் தமது தலைவர் கருத்துப்படி தஞ்சைமாநகர் சென்றார். சேவப்பனைக் கண்டார். சேவப்பன், தளவாயும் பிரதானியுமாகிய முதலியாரை நன்கு வரவேற்றான். சிறப்புச் செய்து "வந்த செய்தி யாது" என வினவினான். தளவாய் முதலியார் தாம் வந்த காரணத்தைப் புகன்றார். எட்டுணையும் எதிர்மறுது இசைந்தான் சேவப்பன். "அதற்கு இடு எது" என்றான்.

அரியநாதர் "தஞ்சையம்பதிக்கு அண்மையில் உள்ள வல்லம் கோட்டையை இடுபடுத்துவதாக இயம்பினர். தரும் என நேர்ந்தான் சேவப்பன். உடனே வல்லம் கோட்டையைச் சோழ நாட்டிற் சேர்த்துக்கொள்ளுமாறு தந்து, திருச்சிராப்பள்ளியைப் பாண்டிய நாட்டிற் சேர்த்து எல்லை பிரித்து விட்டார் தளவாய் முதலியார்.

திருச்சிராப்பள்ளியைக் கொண்டபின்பு முதலியாருக்கு அலுவல் வளர்ந்தது. அந்நகரத்தை

வலுப்படுத்தக் கருதினார். ஆதலால், விரைவாக
வும் ஊக்கமாகவும் வேலை தொடங்கப்பட்டது.
இரு நெடுமதில்க ளுண்டாக்கினார். அவற்றின்
புறத்தே ஆழமும் அகலமும் மிக்க அகழி தொட்
டார். மதுரைக் கோட்டைமீது அமைத்தவாறே
பல கொத்தளங்கள் கட்டிக் காவலை வலுப்படுத்தி
னார். நகர வீதிகளைச் சுகாதாரத்திற்கேற்ப அகலப்
படுத்தினார். கடை வீதிகளைக் கவின்பெறப் புதுப்
பித்தார். சிறந்த அரண்மனை யொன்று ஆக்கினார்.
அதைச் சுற்றிலும் ஒரு அளவிலமைந்த அழகிய
பல கட்டடங்களை அமைத்தார். பலவகைத்
தொழில் வல்லார்களை அங்குக் குடியேற்றினார்.
மலைமீதிலுள்ள உச்சிப்பிள்ளையார் கோவில், தாயு
மானசுவாமி கோவில், மலைக் கோட்டை ஆகிய
வற்றை அணிபெறச் செய்தார். மேலும் தெப்பல்
விழாவிற்குரிய சிறந்த பெரிய திருக்குள மொன்று
வெட்டிச் சித்திரப்பாடமைந்த படிக்கட்டுகள்
அமைத்தார்.

திருச்சிராப்பள்ளி சிறந்த காவல் நகரமா
யிற்று. இவ்வேலைகளையேற்று இயற்றிய தளவாய்
இடையிடையே அரச காரியங்களிலும் ஈடுபட்டு
வந்தார். எதிலும் அரியநாதர் இசைவு பெற்றே
விசுவநாத நாயக்கர் துணிவார். சுருங்கக் கூறி
னால் அரியநாதரை அறிவாகக் கொண்டே விசுவ
நாதர் விளங்கிவந்தார் என்னலாம். திரிசிரபுரம்
செப்பஞ் செய்யப்பட்டபின் அதனை வந்து கண்ட
விசுவநாத நாயக்கர் கொண்ட மகிழ்ச்சிக்கு மட்
டில்லை.

அரியநாதர் அருஞ்செயலால் நாடு பெரிதும்
அமைதியுற்றது. பகைவருடைய பார்வை யொழிந்



தது. எதிரிகள் இருந்தவிடந் தெரியாமல் ஏகி
மறைந்தனர். எங்கும் பெரும்பாலும் அமைதியே
குடிகொண்ட தென்னலாம். இனிச் செய்யவேண்
டியது யாது என எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்
மெய்ப்பேட்டு மெய்யறிஞர்.

## உழவுக்கு உதவி

பாண்டிய நாட்டில் அமைதி நிலவிற்று. பகை
யொழிந்தது. சோரர் பயம் தொலைந்தது. குறு
நில மன்னர் குறும்பு குறைந்தது. எல்லைப்புற
நகரங்கள் ஏற்றவாறு அமைந்தன. ஆதலால்,
விசுவநாத நாயக்கரிடம் குடிமக்கள் விசுவாசம்
மிக்கவர்களானார்கள். அரியநாத முதலியாரிடம்
அன்பு கொண்டார்கள். ஆயினும் தளவாய் மனத்
தில் ஒரு குறையுண்டு. அதாவது குடிகளின் உழ
வுத் தொழிலுக்குகந்த நீர் வசதி அளிக்கப்படா
மையே ஆகும். அதன்பொருட்டு நீள நினைந்து
தொடங்கினார் தளவாய்.

காவிரிக்கரை யிருமருங்கிலும் காடு திருத்தினார்
என முன் கூறினோமன்றோ! அங்கங்கே, அடுத்
தடுத்துப் பல வாய்க்கால்களை வெட்டினார். அத
னால், வயல்களுக்கு நீர் குறைவின்றிப் பாய்ந்தது.
நீர் வசதி நன்கமையவே உழவர் உவப்போடு உழு
தொழில் செய்தனர். பருவத்தே பயிர் செய்தனர்.
குன்றாத விளைவு கண்டனர். வரப்புயர என
ஔவை கூறியது நீர் பயிர்க்கு வேண்டிய அளவு
நிற்கவேண்டும் என்பது பற்றி யன்றோ!
காவிரிக் கரை வயல்கள், நீர்க்கிணைய வரம்புகள்
அமைக்கப்பட்டன. இப்படி வரப்புயர, நீருயர,
பயிருயர, கதிருயர, மணியுயரக் குடிகளுயர்ந்தார்.

கள். கோனும் உயர்ந்தான். ''எல்லாரு மின்புற்றிருக்க நினைப்பதுவே அல்லால் மற்றொன்றறியா'' அரியநாதர் அகமிக மகிழ்ந்தார்.

அம்மட்டோடு அரியநாதர் அமையவில்லை. வைகைநதிமீதிலும் அவர் நினைவு சென்றது. மதுரை வைகை நதிக்கரையிலிருந்தது. ஒருவகையில் வைகை மதுரைக்குத் தோழமையுடையதாயும் மற்றொரு வகையில் பகைமையுடையதாயும் இருந்தது. இயற்கையை நோக்குங்கால் மதுரைக்கு ஆக்குங் கடவுளாகவும் காக்குங் கடவுளாகவும் போக்குங் கடவுளாகவு மிருந்து வைகை திருவிளையாடல் புரிந்த தென்னலாம். வைகைநீர் பெருகினால் நகரில் செல்வமும் மாடகூடங்களும் மக்கட்டொகையும் அருகுமாறு மதுரையுள் புகுந்து சேதம்புரியும் ஆண்டுதோறும் வைகைக்குக் கரைகட்டுவதிலேயே அந் நகர்மக்கள் நலிவும் மெலிவும் கொள்வார்கள்.

நகரத்தின் நாசம் ஒருபுற மிருக்க வைகைநீர் ஒரு சிறிதும் பயன்படாமற் போய்க்கொண்டிருந்தது. புனல் வாய்ப்பற்ற மதுரையின் புலங்களும் பயனற்றுக் கிடந்தன. இருந்தும் பயனற்ற வைகையையும் நிலபுலங்களையும் பார்த்துப் பார்த்து மக்கள் மனமாழ்கிக் கிடந்தனர். பயனற்ற யாறு பழுதுபடுத்தாம லிருந்தாலும் ஒருவிதம் உய்யலாமே என உள்ளம் கரைந்தார்கள். மதுரை மக்கள் துயரம் மறையுங்காலம் தோன்றவே தளவாயின் உள்ளத்தில் வைகையைப் பற்றிய கருத்தும் தோன்றியது.

வைகை நதிக்கு அணை கட்டவேண்டுமென அரியநாதருடைய மனத்தில் ஒரு எண்ணம் எழுந்தது, அது பின்னர் இரு அணைகளாகக் கட்ட



வேண்டி முடிந்தது. அதனால், பேரணை (பெரிய அணை) சிற்றணை (சிறிய அணை) என இரு அணைகள் சமைத்தார். பல கால்வாய்கள் வெட்டினர். அதன்வழி நீர் புரண்டு புலங்களுக்குப் பாயும். அரியநாதர் கட்டிய அணையால் கரம்பாயிருந்த ஆயிரக் கணக்கான காணி நிலங்கள் பயிரிடப்பட்டன. அது கண்ட மக்கள் வையை நீரினால் விளையும் துன்பம் நீங்கி நன்மை விளைந்தது என உவந்தனர். ஒரு சிறுதுளி நீரும் வீணாகா வழியில் பயன்பட்டது. செல்வமும் மிக்கது.

காவிரி, வையை இரு நதிகளைப் போலவே தாமிரவர்ணியும் ஒன்று. அதையும் திரும்பிப் பார்த்தார் அரியநாதர். இரு கரைகளிலும் உள்ள காடுகளை அகற்றி ஊர்களை நிறுவினர். கால்வாய்களைத் தோண்டினர். நீர்ப்பாசன முறைகளை ஏற்படுத்தினர். இப்படி என்றும் இரவு பகலாய் உள வன்மையே துணையாகக் கொண்டு நாட்டுக்கு நன்மையை யுண்டாக்கிய தளவாய் எல்லோராலும் பாராட்டப் பெற்றார். ''உழைப்பின் வாரா உறுதிகள்'' உளவோ!

## 12. தென்னாட்டுப் போர்கள்

### கம்பப் போர் வெற்றி

சோழ நாட்டு வேந்தன் வீரசேகரன், பாண்டிய சந்திர சேகரனுடன் போர் செய்ததைப் பற்றி முன்னர் படித்தீர்கள். அப்போது வீரசேகரனுடன் இருந்து உதவிய வீரன் ஒருவன். அவன் உடல்வலியுடன் உளவலியுங் கொண்டவன். அமர்க்களத்தில் அஞ்சாமல் நின்று எதிர்ப்பான். அவனால்

வீரசேகரனுக்குப் பல முறை, பலவிடங்களில் வெற்றி விளைந்ததுண்டு. ஆதலால், அவ்வீரனுக்குச் சோழன் ஒரு ஜமீன் கொடுத்திருந்தான். அந்த ஜமீன் பெயர் **கம்பம்** என்பது. அது மேற்குமலைச் சாரலைச் சேர்ந்தது.

கம்பத்து ஜமீன்தார் பெரும்படைகளைச் சேர்த்துப் பாண்டிய நாட்டை எதிர்க்கத் தயாராயிருந்தான். அதனால் பாண்டிய நாட்டினர் எவரும் அவனது எல்லைக்குள் போகவும் வரவும் கூடாதெனத் தடுத்தான். விசுவநாத நாயக்கரைப்பற்றியும் பலவாறு இகழ்ந்துகொண்டிருந்தான், அன்றியும் நாகம நாயக்கன் மதுரைப் பிரதிநிதியாயிருந்தபோதே கம்பத்து ஜமீன்தார் ஒரு காசும் கப்பம் கட்டியதில்லை. மேலும் பல குறுநில மன்னர் வரி கொடாமல் எதிர்த்திருக்குமாறு தூண்டுதல் செய்தவனும் அவனே.

அவன் கொட்டத்தை அடக்கவேண்டுமென்று அரியநாதர் கருதினார். அதன்பொருட்டு மதுரை அமைச்சர்களுள் ஒருவராகிய **சுந்தரேச சாஸ்திரியைத்** தூதாக அனுப்பினார். சாஸ்திரியார் தரும சாஸ்திரம் வல்லவர்.

> "*கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லி காலத்தால்*
> *தக்க தறிவதாம் தூது*"

என்ற திருக்குறளுக் கிணங்க, ஜமீன்தாரரிடம் பலவும் சொல்லிப் பார்த்தார். பயனென்ன!

> "*காணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்*
> *பேணாமை பேதைமைத் தொழில்*"

அல்லவா! தூதுவரே, இனி நீர் ஏதும் புகல வேண்டா, என்றும் யாம் விசுவநாதனுக்கோ,



விஜயநகர மன்னர்க்கோ கீழ்ப்படியோம். மதுரைப் படையும் கம்பப் படையும் எதிர்த்து நின்றால் இருவர் வீரமும் எளிதிற் புலப்படும். இனி நீர் ஏகும், விரைவில் விசுவநாதனையும் தளவாயையும் போர் முகத்தில் காண்பதாகக் கூறும்" எனக் கூறிவிட்டான்.

சுந்தரேச சாஸ்திரியார் உடனே திரும்பினார். மதுரைக்கு வந்தார். விசுவநாதரையும் தளவாயையும் கண்டு நிகழ்ந்தவற்றை முறையே கூறினார். அதைக் கேட்டு அரியநாதரும் விசுவநாதரும் அப்பொழுதே அமைச்சர் பலரையும் அழைத்து ஆலோசித்தார்கள். பகையை மிஞ்சவிடலாகாதென்பது ஆட்சிமுறையின் முடிபு. இராமபத்திர நாயக்கர் மதுரை ஆட்சிக்கே முக்கியமானவர். நாகம நாயக்கன் காலமுதல் பெருஞ் சேவை புரிந்தவர். போர்த் திறம் மிக்கவர். நாகம நாயக்கனுக்கு உயிர்த் துணைவர். அவருடைய பெருந்திறனை வியந்தே விசுவநாதர் ஆட்சிக்கு வந்தவுடன் அவர்க்கு ஒரு ஜமீனைக் கொடுத்தார். அது வடகரை ஜமீன் எனப்படும். வடகரை ஜமீன் என்பது பெரிய குளத்துக்கு அருகில் உள்ளது. இராமபத்திரர் வடகரையில் பெருஞ் சேனை ஒன்றைத் தக்கபடி திரட்டி வைத்திருந்தார். அவரையே கம்பம் ஜமீன்மீது போர்க்கனுப்பலாம் என அரியநாதர் எடுத்துரைத்தார். மற்ற அமைச்சர்களும் அடுத்துரைத்தார்கள். அதையே விசுவநாதரும் தொடுத்து இசைந்தார். உடனே படையுடன் வருமாறு இராமபத்திரர்க்கு ஆள்மூலம் செய்தி அனுப்பப்பட்டது.

மறுநாள் பெருஞ் சேனையுடன் வடகரை ஜமீன்தார் வந்து சேர்ந்தார். மற்றும் மதுரைப்

படை வீரர்களுட் சிலரையும் கூட்டி அரியநாதர் அன்று இரவே கம்பத்தை நோக்கிப்படை புறப்படட்டும் எனக் கட்டளையிட்டார். விடியற்போதில் கம்பக் கோட்டையை இராமபத்திர நாயக்கர் முற்றுகை இட்டார். இந்நிகழ்ச்சியை எதிர்பார்த்த கம்பம் ஜமீன்தார் தனது படையை தக்கவாறு தயார் செய்திருந்தான். கதிரவன் பகல்செய்யத் தொடங்கினான். கம்பப் போரும் தொடங்கப்பட்டது. யானை வீரர்கள் தம் யானைகளை ஏவிக் கோட்டையைத் தகர்க்கத் தொடங்கினார்கள். கம்ப வீரர்கள் மதிற் சுவர்கள்மீது நின்று வேல், ஈட்டி முதலியன எறிந்தார்கள். கவண் கற்கள் கணக்கற்றனவாய்ப் பாய்ந்தன. ஆயினும் என்ன! மதுகைமிக்க மதுரை வீரர்கள் மதகயங்களினுதவியால் நாற்புறமும் கோட்டைச் சுவர்களைத் தகர்த்து உட்புகுந்தனர்.

இரு படைகளும் கோட்டையின் உள் கைகலந்தன. வாள் வீரரும் வாசி வீரரும் வாரண வீரரும் ஒருவரை யொருவர் உறுமித் தாக்கினர். கம்பப் படையில் கணக்கற்றோர் காலனூர் சேர்ந்தனர். எஞ்சிய வீரரும் எடுத்தனர் ஓட்டம். ஆகவே, கம்பத் தலைவன் தானே சீறியெழுந்தான். வாளையுருவினான். வருக என அறைகூவினான். இராமபத்திரரும் இசைந்தார். இருவரும் சமர் தொடங்கினர். கம்பத் தலைவன் மானமும் வீரமும் கொண்டு மாபோர் புரிந்தான். போகூழ் வயத்தால் பொன்றினான். தலைவன் வீழ்ந்துபட்டதையறிந்த படைஞர் பலர் பயந்தோடினர். இராமபத்திரர் கம்பத்துக் கோட்டையைக் கைப்பற்றினார். பண்டைய மரபினர் எவரெனத் துருவியறிந்து அவருள் மிக்கான் ஒருவனைத் தன்னுடன்



கூட்டிக்கொண்டு மதுரைக்கு வந்தார். விசுவநாதர் வெற்றிபெற்று மீண்ட இராமபத்திரரைச் சிறப்புடன் வரவேற்றார். அவருடன் வந்தவனுக்குக் கம்பத்து ஜமீன் உரிமையைத் தந்தார். அருகிலிருந்த அரியநாதர் புதிய பதவி ஏற்றவனுக்குப் பல புத்தி யுக்திகளைப் புகட்டினார். "யாண்டுதோறும் திறையளந்து படைகளை யாக்கிப் பாண்டியர் தலைவற்குப் பயன்பட வாழ்க" என்பதே அவர் புகட்டிய நல்லறிவு.

## கயத்தாற்றூர் வெற்றி

பாண்டிய நாட்டிலே **கயத்தாற்றூர்** என்பது ஒன்று. அங்கே பண்டைதொட்டே பாண்டியர் குலத்துரிமையாளர் சிலர் வாழ்ந்து வந்தனர். அவர்கட்கும் அரசுரிமை இருந்தது. ஆயினும் குறுநில மன்னர்களாக மதுரைப் பாண்டியர்க்குக் கப்பஞ் செலுத்தி வாழ்ந்தார்கள். அந்த மரபில் விசுவநாதர் காலத்தில் ஐவர் உடன்பிறந்தவர்கள் இருந்தார்கள். அவர்கள் **பஞ்சபாண்டியர்** என்னும் பெயருடையவர்கள். பெரு வீரர்கள். படைக்கலப் பயிற்சியும் அமர்க்களப் பயிற்சியும் கைவந்தவர்கள். சந்திரசேகரன் காலத்திலும் நாகம நாயக்கன் காலத்திலும் இவர்கள் இறுமாந்து அடங்காமையை மேற்கொண்டிருந்தார்கள்.

விசுவநாத நாயக்கர் ஆட்சிக்கு வந்த பின்பும் பஞ்ச பாண்டியர்கள் பல வகையிலும் உள்நாட்டுக் கலகத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களை அடக்கும்பொருட்டு அரியநாதரும் விசுவநாதரும் பல முறை கருதியதுண்டு. ஆயினும், கம்பக் கலகம் குறுக்கிட்டதால் பஞ்ச பாண்டியர்

செய்தி தடைப்பட்டது. அதனால் பஞ்ச பாண்டியர் படை பெருகியது; பலம் மிக்கது; கலகம் வளர்ந்தது.

இனியும் பஞ்ச பாண்டியரை விட்டுவைப்பின் விளையுந் தீங்கென விசுவநாதர் அறிந்தார். தளவாய் முதலியாரிடம் கூறினார். அவரும் "ஆம்; ஆவன புரிவோம்" என்றார். அடுத்தநாட் காலையே அமருக்கேகவும் அரியநாதரே அவர்களை எதிர்க்கவும் தீர்மானமாயிற்று. அதன்படி பத்தாயிரத்தினும் மிக்க காலாட்கள், இரண்டாயிரம் இவுளி வீரர்கள், நூற்றுக்கும் மிக்க யானை வீரர்கள் ஆர்த்தெழுந்தார்கள். அன்றியும் பீரங்கிகளும் வெடிகளும் பெருவாரியாகக் கொண்டார்கள். தளவாய் முதலியார் தமது வெண் புரவிமீதமர்ந்து படைகளை நடத்தினார். படை திருநெல்வேலி சென்றது. மற்றுமுள்ள பாளையக்காரர்களும் தத்தம் படைகளுடன் வந்து கலந்துகொண்டார்கள்.

அப்பொழுதும் அரியநாதர் ஐவர் பாண்டியர் பொருட்டு அருள் காட்டினார். தம்முடன் வந்த பெரியார்களுள் ஒரு அந்தணரைத் தூதாக விடுத்து அவர்கையில் ஓலையும் ஒன்றளித்தனுப்பினார். அவ்வோலையில் அவர் எழுதியிருந்த மொழிகள் எவர் மனத்தையும் இளகச் செய்யும். போரால் விளையும் பொருளழிவும் உயிரழிவும் காளழிவும் எடுத்தியம்பிக் குடிகளின் வருத்தமுங் கூறியிருந்தார். ஆயினும் என்ன! ஐவர் இணங்கவில்லை. போர் தொடங்க வேண்டியாயிற்று. பஞ்சபாண்டியரில் மூத்தவர் கயத்தாற்றூரிலே மிகப் பெரிய கோட்டையமைத்துக்கொண்டு தங்கியிருந்தார். மற்ற நால்வர்களும் சுற்றிலுமுள்ள ஊர்களில் சிறுசிறு



கோட்டைகளைக் கட்டிக்கொண்டு உறைந்தார்கள். பெரும்படையுடன் சென்ற தளவாய் அரியநாதர் முதன் முதல் கயத்தாற்றூரை முற்றுகையிட்டார்.

சிற்றூர்களில் தங்கியிருந்த மற்ற நால்வருடைய படைகளும் முன்னரே கயத்தாற்றூர்க் கோட்டையில் வந்து குவிந்திருந்தன. சிறுகோட்டைகளைக் காக்கும்பொருட்டு, அங்கங்கே சில வீரர்களை நிறுத்திவிட்டு, நால்வரும் கயத்தாற்றூரிலேயே வந்து கலந்து கொண்டனர்.

கயத்தாற்றூர்ப் படையும் மதுரைப் படையும் ஒன்றுக்கொன்று இளைத்ததாயில்லை. நெடும் பகல் இடைவிடாது போர் நிகழ்ந்தது. இருதிறத்திலும் இறந்த வீரர் எண்ணமுடியாது. 'வடநாட்டுப்போரில் வாகை சூடினோம், பலமன்னரைப் பங்கப்படுத்தினோம், வீரர் பலரை வெற்றிகண்டோம். பஞ்சபாண்டியரிடம் நம் வீரம் பழுதுபடுமோ" என்றையங்கொண்டார் தளவாய். என்றுமில்லாத் திகிலும் மனக்கலக்கமும் அவருடைய மனத்திலுதித்தன. "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்ன அரியநாதர் ஒரு நொடிப்பொழுது அசைவற்று நின்றார். அடுத்த நொடிப்பொழுதில் அவருள்ளம் தெளிந்தது. களைத்திருந்த படைவீரர்க்குக் களிப்பூட்டினார். சிதறியிருந்த சேனையைத் தெளிவித்தார். சிறந்த இருவீரரை முன்னணியில் நிறுத்தினார். மீண்டும் போர் தொடங்கினார்.

போர்க்கள நிலைமையினை அடிக்கடி ஒற்றர் ஓடி விசுவநாதர்க்கு விளம்பிவண்ண மிருந்தனர். ஆதலால், அஞ்சாத ஆண்மையுள்ள அரியநாதரு

டைய நிலையையுணர்ந்து அதிவிரைவில் பெரும் படை ஒன்றைச் செலுத்திக்கொண்டு விசுவநாதர் வந்து சேர்ந்தார். தக்க சமயத்தில் வந்த சேனையைக்கண்டு தளவாய் களிப்பெய்தினர். இழந்த உறுதியை மீண்டும் ஏற்றார். போர் மூண்டது. வீரர் ஆர்ப்பு விண்ணையிடித்தது. எப்படையும் எள்ளளவும் அயரவுமில்லை; அஞ்சவுமில்லை. ஆறு மாதம் அப்போர் தொடர்ந்து நடந்தது. ஆயினும் வெற்றியோ தோல்வியோ விளையவில்லை.

மாண்ட வீரர் மட்டற்றோர், இறந்த இவுளிகள் எண்ணற்றன. சிதைந்தன படைக்கலங்கள். எங்கும் இரத்த வெள்ளம்; பிணக்குவியல்; கண்டார் தளவாய்; கலங்கினர், வருந்தினர், வெறுத்தார் பொருதலை; நெட்டுயிர்ப்புற்றார்; நீள நினைந்தார்; போரை நிறுத்தினர்; பொருந்துமாறு கண்டார்; படைவீரரைப் பாழ்படுத்தாமல் போர் நிகழ்த்த முடிவு செய்தார். எப்படி! படை இன்றியே இரு திறத்துத் தலைவரும் ஒருவரையொருவர் எதிர்த்துத் தனிப்போர் செய்வதென்று. அதைப் பஞ்ச பாண்டியர்க்கும் எழுதியனுப்பினர். வெள்ளைக் கொடி பிடித்து வேதியன் ஒருவன் தூதாகச் சென்று செய்தி கூறி, ஓலை தர, அவர்களும் அதற்கிசைந்தனர். விசுவநாதர் கொண்ட மகிழ்வு மட்டற்றது.

பஞ்சவரைத் தாமே எதிர்ப்பதாக அரியநாதர் கூறினர். “கூடாது நானே அவர்களை எதிர்ப்பேன்” என்றார் விசுவநாதர். முடிவில் விசுவநாதரே வாளேந்தி வாகுதட்டிப் புறப்பட்டார். பாண்டியருள் ஒருவன் பாண்டவ வீமன் போல தோள்வலி மிக்கவனுமிருந்தான். அக்காலத்தில்



திருநெல்வேலிச் சீமையில் அவனுக்கீடும் எடுப்புமானோர் எவருமில்லை. ஆதலால், அவன் பாண்டிய நாட்டு வீமன் எனப்பட்டான். அவனே விசுவநாதரை எதிர்த்தான். சிறிது நேரம் பொருதனர் இருவரும். முடிவென்ன! வீமன் வெட்டுண்டு விழுந்தான்.

வெற்றிமுரசு கொட்டி வீரர் ஆர்ப்பரித்தனர். பின்னர் அரியநாதரை அழைத்து கயத்தாற்றாருக்குத் தக்க தலைவரை நியமிக்குமாறு விசுவநாதர் பணித்தார். தோற்ற ஐவர்க்கு நெருங்கிய சுற்றத்தானாகிய ஒருவனைத் தேர்ந்து சிற்றரசனாக்கினர். யாண்டு தோறும் கப்பங்கட்டவும் கட்டளையிட்டார். அவர்களே பின்னர் தென்காசியில் இருந்து தமிழ் வளர்த்தார்கள். நாளடைவில் வேள் என்ற பட்டமும் பெற்றார்கள்.

## சேரநாட்டுப் போர் வெற்றி

அச்சுததேவராயர் பட்டத்துக்கு வந்தவுடனே தென்னாட்டில் உன்னி கேரளவர்மன் என்பவனும் செல்லப்பன் என்னும் ஒரு வீரனும் இடையிடையே கலகம் விளைத்துக் கொண்டிருந்தனர். அதன் பொருட்டு அச்சுததேவராயர் பாண்டிய நாடு வந்து அவர்களை அடக்கிக் கப்பங்கட்டச் செய்தார். அந்த வர்மன் திருவனந்தபுரத்திலிருந்தான். அச்சுததேவராயர் இறந்தார். அவர்க்குப் பின்பு சதாசிவராயர் முடிபுனைந்தார். ஆனால், அவர் ஆளுந்திறனற்றவர், எனவே ராமராயர் என்பவர் சதாசிவராயரைப் பதுமைபோல் வைத்து ஆட்சி நடத்தினர். இதையறிந்த உன்னிகேரளவர்மன் முன்னே தான் ஏற்றுக் கொண்ட கப்பங்கட்ட இசையவில்லை. அன்றியும் பாண்டிய நாட்டில்

புகுந்து திருநெல்வேலிச் சீமையில் பெரும் பகுதியைக் கைப்பற்றினன்.

உன்னிகேரளவர்மன் செய்த புரட்சியினால் கீழைக்கடற்கரையிலிருந்த சிலரும் முனைந்தெழுந்தனர். இவ்விருவகையிலும் ஏற்பட்ட குழப்பத்தை அடக்கி ஆட்சியை அமைதிப்படுத்த வேண்டுமென அரியநாதர் கருதினார். விசுவநாதருடன் கலந்து பேசினார். உடனே விஜய நகரத்துக்கு ஒரு கடிதம் எழுதி ஆளை விடுத்தார். தளவாய் முதலியாரால் விடுக்கப்பட்ட ஆளைக்கண்டார் சதாசிவராயர். அவர் என்ன செய்வார்! அனைத்துக்கும் அதிகாரியாயிருந்த இராமராயரிடம் தந்தார். உடனே இராமராயர் பெருத்த சேனை ஒன்றைத் தயார் செய்தார். அவர் தமது மருகர் ஒருவரைச் சேனைத் தலைவராக்கியிருந்தார். அச்சேனாபதி மிக்க வீரருமாவர். போரில் புறங்கொடா வல்லவர். அவர் பெயர் **விட்டலர்**. இராமராயர் பெருஞ்சேனையுடன் விட்டலரைக் கூட்டி மதுரைக்கு அனுப்பினார்.

விட்டலர் தாம் புறப்படுங்கால் தமது தம்பியாகிய **திம்மய்யா** என்பவரையும் துணை கூட்டிக்கொண்டார். திம்மய்யாவும் சேனையுடன் விட்டலரோடு கலந்துகொண்டான். இவ்விரு படை வீரரும் தம் படைகளை நடத்திக்கொண்டு மதுரை வந்து சேர்ந்தார்கள். இதற்குள் அரியநாதர் சோழநாட்டுத் தலைவனாகிய **சதாசிவ நாயக்கனுக்கும்** ஆணை அனுப்பினார். அவனும் தன் படையுடன் வந்தான். திருவிடைமருதூரிலிருந்த **திருச்சிற்றம்பலப் பட்டன்** என்னும் அந்தணனையும் அரியநாதர் அழைத்து ஒரு சேனைக்குத் தலைவனாக்கினார். இப்படித் திரட்டிய பெரும்படையைத் தாமே நடத்திக் கொண்டுபோகப் புறப்பட்டார். அரியநாத முதலியாரின் அஞ்சாத ஆண்மையையும் படை திரட்டலின் பாங்கையும் அணிவகுப்பின் திறத்தையும் கண்டு விசுவநாத நாயக்கர் வியந்தார்.



அரியநாதரை அண்மி, தன் புதல்வன் குமார **கிருஷ்ணப்ப நாயக்கனையும்** கூட்டிச் செல்லுமாறு கூறினார். தளவாயும் அம்மொழியைத் தட்டாமலிசைந்தார். தம் குமாரன் போர் வீரத்தைக் காணும்பொருட்டு விசுவநாதரும் உடன் சென்றார். இப்படியாகத் திரண்ட சேனா வெள்ளம் பெருவீரர் தலைமையில் நடந்தது. இப்படைத்திரளை மேற்பார்க்கும் முதற்பொறுப்பு முதலியாருடையதாயிருந்தது. அவர் **அருவாய் மொழிக்கணவாய்** வழியாகப் படையை நடத்திச் சென்று சேரநாட்டுக்குள் புகுந்தார்.

விஜயநகரப் படைத்துணை கொண்டு மதுரையரசர் வருவதையறிந்த உன்னி கேரளவர்மன் போர்த்துக்கீசிய கிறிஸ்தவகுரு **சேவியர் சாமியாரைக்** கொண்டு தந்திரமாகப் போரை நிறுத்தக் கருதினான். மதுரையரசரும் அரியநாதரும் படையுடன் **கோட்டாறு** என்னும் ஊரைக் கிட்டினர். சேவியர் சாமியார் விரைந்துவரும் படையின் வேகத்தைக் குறைத்தார். உடனே உன்னி கேரளவர்மா சேவியர் சாமியாரைக் கொண்டு சமாதானம் செய்ய முயன்றார்.

கீழைக் கடற்கரைக் குழப்பத்தைப் பற்றி முன்னே குறிப்பிட்டோமன்றோ! அக்குழப்பம் **பரவர்** என்பவராலும் அப் பரவர்க்குத் துணையாயிருந்த போர்த்துக்கீசியராலுமே எழுந்தது.

ஆகவே, விட்டலர் படையை அங்கு அனுப்பினர் அரியநாதர். கேரளவர்மாவின் சமாதான முயற்சி எளிதில் கைகூடவில்லை. இதனிடையில் அச்சேர மன்னன் இறந்தான். உன்னி கேரளவர்மாவின் புதல்வன் **பூதலவீர கேரளவர்மன்** பட்டத்துக்கு வந்தான். போரினால் நன்மையில்லை என அறிந்தான். உடனே விசுநாதரிடம் சென்று பணிந்தான். தனது முன்னோர் திருநெல்வேலிச் சீமையில் கைப்பற்றியிருந்த பகுதிகளை விட்டு, கப்பமும் கட்ட உடன்பட்டான். அதற்கிணங்கி விஜயநகரப் படை மீண்டுவிட்டது.

அரியநாதர் அப்பொழுது கொண்டிருந்த ஊக்கத்தையும் உழைப்பையும் சூழ்ச்சிகளையும் கண்ட விசுவநாதரும் விட்டலர் முதலிய வீரர்களும் பெரிதும் பாராட்டினார்கள். திருவிடைமருதூரிலிருந்து வந்த அந்தணர்க்கு அரியநாதர் விருப்பப்படி இரண்டு கிராமங்கள் சர்வமான்யமாக விடப்பட்டன. அதன் பின்னரும் தளவாய் சில படைகளுடன் சென்று கொங்கு நாட்டுக் குறுநில மன்னனையும் கோவை, சேலம் ஆகிய சிற்றரசர்களையும் பணிவித்து வந்தார்.

## 13. கோட்டையும் காவலும்

### கோட்டைகள்

விஜயநகர வேந்தர் ஆணைப்படி பாண்டிய நாட்டின் தளவாயாகவும் பிரதானியாகவும் பதவி ஏற்ற அரியநாதர்,

“ ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல் ”



என்பதற்கிணங்கப் பாண்டிய நாட்டில் எல்லாச் சீர்திருத்தங்களையும் செய்தார். நாட்டைப் பெருக்கினர். இப் பரந்த நாட்டைப் பாதுகாப்பதன் பொருட்டு ஆகவேண்டியவைகளைக் கருதினர். இன்றியமையாத பலவிடங்களில் கோட்டைகள் கட்டத் தொடங்கினர்.

முன்னரே மதுரை, திரிசிரபுரம் ஆகிய விடங்களில் அரியநாதர் ஆக்கிய காவற் கோட்டைகளைப் பற்றி நாமறிவோம். பின்னும் அவர் தமது முயற்சியினால் எழுந்த கோட்டைகள் பல. அவற்றுள் மிகச் சிறந்தது **சத்தியமங்கலம்** கோட்டை. இது மைசூருக்கும் கோயம்புத்தூருக்கும் இடையிலுள்ளது. மற்றும் **பவானி, காவேரிபுரம், சாமபுரம், ஆண்டியூர், தலைநாயக்கனூர்** ஆகிய விடங்களில் உள்ள கோட்டைகள் மிக உறுதி வாய்ந்தவை. அவற்றுள் ஆண்டியூர்க் கோட்டை முற்றிலும் கருங்கல்லாலானது.

அன்றியும் **அட்டில்துறை, பாகேசுவரனூர்** முதலிய விடங்களிலுள்ள கோட்டைகளும் **மலைக்கோட்டை**யும் பாராட்டத்தக்கவை. இவை கோவைக்கும் அப்பால் வடமேற்கிலமைந்தவை. இவைகளும் சிறந்தவைகளே. இவையன்றி பெரு நம்பிக்கையும் பெருவலியும் படைத்த தலைவர்கள் தங்கியிருந்த **சேலம், நாமக்கல், திண்டுக்கல், அழகர்மலை** ஆகிய கோட்டைகள் அழகாகவும் அசைக்கமுடியாதனவாகவும் இருந்தன. **ஓமலூர், சேந்தமங்கலம், அனந்தகிரி, பரமட்டி, மோகனூர், சங்கரி துர்க்கம், திருச்செங்கோடு** ஆகிய விடங்களிலும் கோட்டைகளை அமைத்தார்.

இப்படி எழுப்பப்பட்ட கோட்டைகள் சிலவற்
றில் சிறந்த கோவில்களையும் அமைத்தார். அன்றி
ஒவ்வொரு கோட்டையிலும் இருள் வழி, சுரங்க
வழி, மறைவு அறை, படைக்கலச் சாலை, மருந்து
கிடங்கு, பிரங்கி மேடு முதலியவற்றை அமைத்திருந்
தார். கோட்டைகளைச் சுற்றி மதிலரணும் அகழி
யரணும் ஆக்கப்பட்டன. கூடியமட்டில் இயற்கை
யாக காட்டரண், ஆற்றரண், மலையரண் முதலியன
சிறக்க அமைந்த இடங்களைக் கண்டே கோட்டை
கள் சமைத்தார்.

### காவல்கள்

தளவாய் தக்காங்கு கண்ட கோட்டைகள் ஒவ்
வொன்றிலும் படையை அமைத்திருந்தார். அக்
காலத்தில் படைக்குத் தண்டு எனப்பெயர். பகை
வரை நால்வகை உபாயங்களுள் ஒன்றாகிய
தண்டோபாயத்தால் அடக்குதற்குப் பயன்படும்
துணையாதலால் படைக்குத் தண்டு எனப் பெயர்
வழங்கியது போலும். தண்டுள்ள படியால்
கோட்டை ஒவ்வொன்றிலும் தண்டுத்தலைவர்களும்
இருந்தார்கள். அவர்கள் கோட்டைக்காவலன்,
பாளையக்காரன், நாட்டாண்மைக்காரன், மதுரைத்
தலைவன், மண்டலத்தலைவன் என்பன வற்றுள்
ஏதாவதொரு பதவி ஏற்றிருப்பார்கள். அவர்கள்
தம்மிச்சையில் வாழ்தற்குரியவர்கள். ஆயினும்
வருவாயில் மூன்றிலொன்றை இறையாகக் கட்டி
ஒன்றைப் படைச்செலவுக்கும் ஒன்றைத் தமக்கும்
பயன்படுத்தக் கடமைப் பட்டவர்கள். இங்ஙனமே
மதுரையிலெழுப்பிய கோட்டையிலும் எழுபத்
திரண்டு கொத்தளங்களை அமைத்து ஒவ்வொன்
றிலும் பாளையப்பட்டுகளை அமைத்தார். இவையே



யன்றி ஊர்க்காவல் வகையிலும் அரியநாதர் அருந்
தொண்டு செய்திருக்கிறார். அவர் அன்று செய்த
ஏற்பாடுகள் இன்றும் தென்பாண்டி நாட்டில் நடை
முறையில் இருந்து வருகின்றன.

## 14. பழமை மறவாமை

அரியநாத முதலியார் விஜயநகர வல்லரசுக்கு
வலது கையாகவும் தென்னாட்டு ஆட்சிக்குத் தெளி
யறிவும் வெற்றியுந்தரும் தெய்வமாகவும் திகழ்ந்
தார். அவர் ஒரு நாள் அரசவையில் அமர்ந்திருந்
தார். அப்போது அரண்மனைவாயிலில் ஒரு குழப்
பம் உண்டாயிற்று. அதாவது ஒரு அந்தணர்
அரண்மனையுள் புக முயல்கின்றார். காவலர்கள்
தடுக்கிறார்கள். தடைக்கஞ்சாமல் தாராளமாக
அந்தணர் வந்து கொண்டிருக்கின்றார். உள்வாயில்
வரையில் வந்துவிட்ட அந்தணரை அங்கிருந்த
காவலன் தடுத்தான். யாவர் என்றான். அக்
கட்டைக் கடந்து வர அவராலியலவில்லை. "நான்
காஞ்சிபுரத்தையடுத்த மெய்ப்பேடு; இங்கே முதல்
மந்திரியாயிருக்கும் முதலியார் எம் ஊர்க்காரர்;
அவரைப் பார்க்க வந்தேன்" என்றார். பின்னரும்
தடையுண்டா! காவலனே கண்ணியமாகக் கூட்டிச்
சென்று முதலியாரிடம் காட்டி விட்டான். பத்தி
பிரிக்க வந்த அந்தணரை நல்வரவு கூறி அருகில்
அமர்த்திக்கொண்டார் முதலியார். "தாங்கள் எந்த
ஊர்" என்றார். அதற்கு விடை கூறாமல் அந்தணர்
"தங்கள் பெயர்தான் அரியநாயகமோ" என்றார்.
"ஆம்; என்னை இப்போது அரியநாதன் என்பார்
கள்" என்றார் தளவாய். தாங்கள் மெய்ப் பேடு
காளத்தியப்பருடைய மகன்............" என்றார்.
அவர்வாய் மூடுமுன், ஆம்; என் தாய் சிவகாமி

யம்மையார். நான் விநாயகர் கோவில் நம்பியான் அவர்களிடம் படித்தவன் என வரிசையாகச் சொல்லிவிட்டார். இதற்குள் வந்த அந்தணர் ஒரு ஓலைத் துண்டைத் தமது மடியிலிருந்து எடுத்து நீட்டினார். அரியநாதர் அதனை வாங்கிப் பார்த்தார். அவர் முகத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. "இச்சீட்டு ஐம்பது யாண்டுகளுக்கு முன் யான் எழுதிக்கொடுத்தேன்; நான் ஏழைக் குடியில் பிறந்து எளிய வாழ்வில் இருந்தேன். அப்போது ஒரு அந்தணப் பெரியார் என் முகத்தையும் கை ரேகையையும் பார்த்து, யோகம் வரும், என்றார். அப்போது எழுதிக்கொடுத்தேன் இதனை. தாங்கள் யார்? இச்சீட்டு தங்கள் கைக்கு எப்படிவந்தது? தாங்கள் அப்பெரியவரின் குமாரரா? என்று பரிவும் பரபரப்பும் தோன்றக் கேட்டார். அந்தணர் "ஆம் நான் அவர் மகன் என் தந்தை இறந்தார்" என்றார். இதைக் கேட்ட முதலியார் இருசெவிகளையும் பொத்தினார். இறந்தாரா! ஆ! எனக்கு வாழ்வளித்த வள்ளல் மறைந்தாரா! என்று வாய்விட்டு விளம்பினார்.

அதற்குமேல் பேச அவர் நாவெழவில்லை. சரி; இனி யான் அவரைப் பார்க்க முடியாது. தங்களையே அவராகக்கருதுகிறேன். நான் எழுதியீந்தாங்கு என் செல்வத்தில் பாதியைத் தங்கட்குக் கொடுக்கிறேன் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார். அந்தணர் "அரியநாதரே, நான் அதன் பொருட்டு இங்கே வரவில்லை. எனக்கு ஒரு வீடும், உணவுக்கு வேண்டிய அளவு விளையும் நிலமும் சில பசுக்களும் வேண்டும் என்றார். அவர் கேட்டது போல இருமடங்கு தருவதாகக் கூறிச் சில நாள் தம்மிடமே வைத்திருந்து அந்தணர் கேட்டபடி



அனைத்தும் ஆக்கிக் கொடுத்தனர். அதனால், அந்தணர் நல்வாழ்வுற்றார். வழியே சென்ற வேதியர் கூறிய வாக்குப்பலித்ததற்கு இவ்வளவும் செய்த அரியநாதர் தமக்குக் கல்வி கற்பித்த நம்பியானை மறந்திருப்பாரோ! ஒருக்காலும் மறந்திருக்கமாட்டார். ஆனால், அரியநாதர் விஜய நகரமடைந்த பின்பு நம்பியானுடன் கொண்டிருந்த சம்பந்தம் அறிய முடியவில்லை. அதைப் போலவே அரியநாதருடைய பெற்றோர் நிலையும் அறிய முடியவில்லை. என்றாலும் பெற்றோர் அரியநாதருடன் சென்று பெருவாழ்வு பெற்று வாழ்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அதைப் போலவே தம் கல்வி ஆசிரியரிடத்தும் அன்புகாட்டி அழைத்தேகி உடன்வாழச் செய்திருப்பாரென்று கருத வேண்டியிருக்கின்றது. அன்றி நம்பியான் தன் உறைவிடத்தை விட்டேக விரும்பியிராவிடினும் இருந்த விடத்திலேயே இதம்பல ஏற்குமாறு உதவி யிருப்பாரென்றெண்ணுதற் கிடமாகின்றது. அன்றியும் காசிமா நகரில் நாளொன்றுக்கு ஆயிரம் அந்தணர்க்கு அன்னமிட்ட அறப்பணியை அரியநாதர் நம்பியான் பெயரால் நிகழ்த்தினார் எனத் தெரிகின்றது.

காசியில் நிகழ்ந்த அன்னதானத்துக்காகச் சில ஊர்களை ஒதுக்கிவிட்டதும் அடிக்கடி குறித்த நாட்களில் பணமுடிப்புக்கள் அனுப்பியதுமாகிய தொண்டு நம்பியான் விருப்பப்படி நடந்தேறியிருக்கலாம் எனக்கருதவேண்டியிருக்கிறது. அல்லது சமஸ்கிருதத்தில் பற்றுடைய நம்பியான் காசியில் வாழ்வதை விரும்பி, அரியநாதருடைய உதவி பெற்று அங்குச் சென்றிருந்து, அன்னதானம் செய்திருக்கலாம். அப்பணி முட்டின்றி என்றும் நடக்க

வேண்டி அரியநாதர் ஆதரவு தந்திருக்கலாம். எது எப்படியிருப்பினும் அரியநாதருடைய அன்ன தானம் நம்பியான் பெயரால் நடந்தேறுவதைக் கொண்டு அரியநாதருடைய நன்றிமறவாமை புலப்படும். பிறவிக்குணமாகிய கொடைத்திறனை எழுத்தறிவித்த இறைவனாகிய நம்பியான் பெயரால் நடத்தக் கருதிய அரியநாதரின் பெருமையே பெருமை.

## 15. தாயரசு காத்தல்

### தலைக்கோட்டைப் போர்

அரியநாதர் வாழ்நாளிலேயே கிருஷ்ணதேவரும் அச்சுததேவரும் மறைந்தனர். பின்னர் முடிசூடியவர் **சதாசிவராயர்**. இவர் மண்ணாசை பிடித்தவர். மதி நுட்ப மற்றவர். சுக போகங்களில் விருப்பமுடையவர். விஜயநகர சாம்ராஜ்யத்தில் **ராமராயர்** என்பவர் ஒருவர். அவர் கிருஷ்ண தேவராயரின் மருகர். ஆதலால், அவரை மாப்பிள்ளை ராயர் என்பது வழக்கம். மாப்பிள்ளை ராயர் மதி நுட்பமும் உடல் வன்மையும் மனவலியும் மிக்கவர். ஆகவே, சதாசிவராயரைத் தம் கையில் வைத்துக் கொண்டு விஜயநகர சாம்ராஜ்யத்தைத் தம் கருத்துப்படி ஆண்டுவந்தார். என்றாலும் ராமராயர்க்கு ஆட்சி முறையின் சூழ்ச்சி குறைவு. மற்றும் செருக்குடையவர். ஆதலால், முகம்மதியருக்குள்ளிருந்த சச்சரவுகளில் தலையிட்டுக்கொண்டார்.

அக்காலத்தில் வட நாட்டில் **அஹமத், கோல்கோண்டா, பிரார், பிடார், பிஜபூர்** என ஐந்து முகமதிய அரசுகளிருந்தன. அவர்கள் ஒருவர்க்கொருவர் அடிக்கடி சிறு பகை கொள்வதுண்டு. அவ்



வமயங்களில் இராமராயர், பீஜபூர் சுல்தானுக்குத் துணையாயிருப்பதுண்டு. ஆதலால், அஹமத்நகர சுல்தான் இராமராயரின் மீது பெரும் பகை கொண்டுவிட்டான். இந்நிலையில் இராமராயர் சில நாள் கழித்தார். ஆயினும், தமது செருக்கினால் முகமதியருடைய வல்லமையைக் கருதாமலே இருந்தார். இதற்கிடையில் பீஜப்பூர் சுல்தானும் விஜயநகர ஆட்சிக்கடங்கித் திறை செலுத்துவதை நிறுத்தினான்.

"உறங்கு மாயினும் மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்"

என்ற மொழி பொய்யாயிற்று. இந்நிலையையுணர்ந்துதான் முற்கூறிய தென்னாட்டுக் கிளர்ச்சியும் தோன்றிய தென்பதை நாம் அறிவோம்.

நாளடைவில் முகம்மதிய அரசர் ஐவரும் ஒற்றுமை கொண்டார்கள். அவர்களுள் நெடுநாட்களாக இராமராயர்மீது பகை கொண்டிருந்த அஹமத் சுல்தான் நிஜாம் ஷா தலைமை பூண்டான். ஐவருடைய படைகளும் பெருக்கப்பட்டன. விஜயநகரைத் தாக்குவதெனக் கிளர்ந் தெழுந்தனர். இதனை அறிந்தார் இராமராயர். அவருக்குத் தம்பியர்கள் இருவருண்டு. அவர்கள் திருமலைராயர், வேங்கடாத்திரி ராயர் என்போர். இருவரும் பெருவீரரே. என்றாலும் தன்னலக்காரர்கள். 'அவர்களைத் துணைக்கு வைத்துக்கொள்ளலாம். முதன்மைப் பொறுப்புக்கு அவ்விருவரும் உரியவராக மாட்டார்கள் என்பது இராமராயருடைய கருத்து. ஆதலால், கிருஷ்ணதேவராயர் காலமுதல் விஜயநகரத்தின் நன்மைக்குப் பாடுபட்ட மெய்யன்பர் அரியநாதரே தகுந்தவர் என்று கொண்டார்.

இச்சமயத்தில் விசுவநாத நாயக்கர் இல்லாதது பெருங்குறை. என்றாலும் அரியநாதர் ஒருவரே போதும் எனத் தேர்ந்த இராமராயர் உடனே ஓலை போக்கி அரியநாதரை அழைத்தார்.

மதுரை ஆட்சிபுரிந்த விசுவநாத நாயக்கர் விண்ணுலகடைந்தார். குமார கிருஷ்ணப்ப நாயக்கனுக்கு முடி சூட்டினார் தளவாய். இவை நிகழ்ந்து இரண்டாண்டுகளாயின. ஆட்சிப்பொறுப்பு அனைத்தும் அரியநாதர் பங்கிலிருந்தது. அச்சமயம் விஜய நகரிலிருந்து ஓலை வந்தது. என் செய்வார் அரியநாதர்! விலக்க முடியாத கடமை. 'ஆரென்றறியத் தகாத வெனை ஆளாக்கித் திருவளித்த விஜயநகரப் பேரரசுக்கு உயிருள்ளளவும் உழைப்பதே என் கடமை' என எண்ணினார். மதுரை மன்னனுக்கு மனத் தேறுதல் கூறி, மாபெருஞ் சேனையுடன் புறப்பட்டு மிக விரைவில் விஜயநகரடைந்தார்.

அரியநாதர் வந்ததால் இராமராயர் அளவு கடந்த அகமகிழ்வுற்றார். அவர் பொறுப்பில் அனைத்துச் சேனைகளையும் ஒப்புவித்தார். அரியநாதர் படைகளைத் திரட்டி, அணி வகுத்து அமருக்கு எழுப்பினார். இதற்குள் கிருஷ்ணா நதியின் வடகரையிலிருந்த முகமதியப் படை இரவோடிரவாய்த் தென் கரை வந்து சேர்ந்தது. அங்கே **தலைக்கோட்டை** என்னுமிடத்தில் முகமதியப் படை பாடி வீடுகளமைத்தது. அதற்கடுத்த **போகபுரம்** என்னும் ஊர்க்களத்தில் போர் தொடங்கியது.

அரியநாதர் மற்றும் பல வீரர்களைக் கொண்டு அருந்திறல் காட்டிப் போரை நடத்தினார். வெற்



றியே விளைந்திருக்கும். எனினும் "சாவாரை யாரே தவிர்ப்பார்!" இராமராயர் வெட்டுண்டு இறந்தார். விஜயநகர வீரர்கள் வலதுகை யற்றவரே போலப் பின்வாங்கினார்கள். திருமலைராயன் திரும்பியோடினான். அரண்மனையுட் புகுந்து அரும் பொருள் திரட்டிக்கொண்டு அரச குடும்பத்துடன் **பெனுகொண்டா** கோட்டையிற் போய்த் தங்கினான்.

## நிலையாமை

தாம் போரில் மடிந்தால், விஜயநகர மன்னராக அரியநாதர் முடிசூடவேண்டும் என்று இறப்பதற்குமுன் இராமராயர் உறுதி கூறியிருந்தார். ஆனால், அரியநாதர் அதன்படி முடிசூட முடியாத வகையில் பலர் தடை செய்தனர். அவரும் அதனை விரும்பவில்லை. என்றாலும் தமது முயற்சியினால் மூன்று தலைமுறை முதன்மை பெற்றிருந்த ஆட்சி அழிவதுபற்றி வருந்தினார்.

"ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்" என்பது அங்கு மெய்யாயிற்று. முகமதியர் விஜயநகருக்குச் செய்த கேடுகள் பல.

"எழுநிலை மாடம் கால்சாய்ந்து உக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்"

என்னும் நிலையாமையை யுணர்த்தும் நெடுமொழி நேர்மையாயிற்று. விஜயநகரத்தைப் பற்றி முன்னரே படித்திருக்கிறீர்கள். ஆயினும், அதன் அழிவைக் கூறுங்கால் பின்னும் அதன் சிறப்பமைப்புக்களை விளக்கிச் சொல்ல வேண்டியது இன்றியமையாததாகின்றது.

விஜயநகரம் கி. பி. 1336-இல் **ஹரிஹரர்-புக்கர்**
என்ற இரு சகோதரர்களால் நிறுவப்பட்டது.
அது துங்கபத்திரை நதியின் தென் கரையில்
அமைக்கப்பட்டது. அப்போது அதன் பெயர்
**வித்தியாரண்ய நகரம்** என்பதாகும். அது முதல்
பல மன்னர்களின் முயற்சியால் சீரும் சிறப்புமுற்று
செவ்விதின் விளங்கியது. சுமார் 200 யாண்டுகளில்
அந்நகரடைந்த நன்னிலையைச் சுருக்கிக் கூறு
வோம். அந்நகரின் நீளம் பன்னிரண்டு மைல்,
அகலம் பத்து மைல். அதைச் சுற்றி ஏழு மதிற்
சுவர்கள் இருந்தன. வெளிச் சுற்றுக்கள் இரண்
டில் பயிரிடுதற்குரிய வயல்களும் தோப்பு முதலியன
வும் இருந்தன. மூன்றாவது நான்காவது சுற்றுக்
களில் தொழிற்சாலைகளும் அவற்றில் தொழில்புரி
யும் வேலைக்காரர்க்குரிய வீடுகளும் இருந்தன.
ஐந்தாவது ஆறாவது சுற்றுக்களில் செல்வர்களும்
உயர்குடியினரும் வாழ் மனைகளிருந்தன. ஏழா
வது சுற்று, நகரின் நடுவில் மற்ற ஆறு அரண்கள்
சூழ அமைந்திருந்தது. அங்கே அரண்மனையும்
ஆவண வீதிகளும் ஆக்கப்பட்டிருந்தன. நகர
மெங்கும் பல அடுக்கு மாளிகைகளும் அணிபெற
வானளாவி நின்றிருந்தன. அந்நகரின் செல்வ
மும் சித்திரமும் சிறப்பும் ஆட்சியும் அழிந்ததைக்
காணின் அம்ம! எவரும் இரங்குவர்.

எவ்வாற்றானும் ஈடும் எடுப்புமற்ற விஜயநகரம்
கொள்ளையாலும், கொடு நெருப்பாலும் அழிந்தது
மன்றி பெருமாடங்களும் கோபுரங்களும் தகர்க்கப்
பட்டு அழிந்தன. அதற்குக் காரணம் முகமதிய
வரசர் கைக்கொண்டவுடன் மன வேறுபாடுற்று,
எவரும் அங்கிருத்தலாகாது என்னு மிழிகருத்து
கொண்டமையே யாகும். ஆதலால், ஆறுமாத



காலம் அழிதொழிலையே நிகழ்த்தினர். பெனு
கொண்டா சென்ற அரியநாதர் இவற்றைக் கேள்
விப்பட்டு மனங் கொதித்தார். சலவைக் கற்களா
லமைந்த சதுரப்பாடுள்ள தமனிய மாளிகைகள்
தரைமட்டமாயின வெனின் வருந்தாதார் யாவர்?
முகமதியர் தமது மனஞ் சலித்துத் திரும்பிய
பின்னரும் அரியநாதர் திருமலைராயருடன் விஜய
நகரடைந்தார். அழிந்த மாளிகைகளைச் சீர்திருத்தி
குடிகளைச் சேர்த்து சிறப்புறச் செய்யலாமென
முயன்றார். அவர் பத்து மாதங்கள் பாடுபட்டும்
பயன்விளையவில்லை. அதை முற்றும் மறந்தார்.
ஆயினும் அவருள்ளம் ஆறுதலடையவில்லை.

## தன்னலங் கருதாமை

இராமராயர் இறக்குமுன் விஜயநகர் அரசை
அரியநாதரே ஏற்கவேண்டுமென்று இயம்பி யிருந்
தும் தளவாய் தன்னலம் கருதவில்லை. எப்படியும்
இராயர் வமிசம் எங்கேனுமிருந்து அதிகாரம்
செலுத்த வேண்டும் என்பதே அவர் விருப்பம்.
ஆதலால் பெனுகொண்டாவுக்கு மீண்டும் திருமலை
ராயருடன் சென்றார். விஜயநகர ஆட்சிக்குட்
பட்ட பகுதியை முப்பிரிவாக்கினர். அவை வடக்குப்
பகுதி, மேற்குப் பகுதி, தெற்குப்பகுதி என்பன.
அவற்றுள் வடக்குப் பகுதியென்பது பெனு
கொண்டாவுக்கு வடக்கிலுள்ளது, அதைச் சதா
சிவராயர் இருந்து ஆளவேண்டும். அவர்க்கு
பெனுகொண்டா இராஜானி. திருமலைக்கு
மேற்பகுதி. அது மேற்குத்தொடர்ச்சி மலையின்
மேற்பாலுள்ளது. அதன் தலைநகர் சீரங்கப்பட்ட
ணம். அங்கிருந்து திருமலை ஆட்சிபுரிய வேண்டும்.
வேங்கடாதிரிக்குச் சந்திரகிரி தலைநகர். அவன்

அங்கிருந்து தென் பகுதியைப் பாதுகாக்க வேண்டும். அவனுக்கு அடங்கியவை சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடுகள். இம்மூப்பெரும் பிரிவுக்கும் சதாசிவராயரே மகாராயர். என்னும் ஏற்பாடுகள் செய்தார். இவ்வேற்பாடுகளுக்கு எவரும் இயைந்தனர். ஆனால், அவர்கள் அரியநாதரை வேண்டிக் கொண்டது ஒன்றுண்டு. அதாவது சுமார் **ஐம்பது** யாண்டுகளாக விஜயநகர சாம்ராஜ்யத்தின் நன்மைக்குப் பாடுபட்டும் **நாற்பது** யாண்டுகளாக அந்த சாம்ராஜ்யத்தின் தளவாயாக இருந்தும் தொண்டாற்றிவந்த தாங்களே இனியும் எங்களாட்சியிலும் தளவாயாக விருந்து தக்க சமயத்தில் உதவி தரவேண்டும் என்பதேயாகும்.

அவ்வேண்டுகோளுக்கு தளவாய் முதலியார் இயைந்தார். பின்னும் ஓராண்டு அங்கேயே இருந்து இன்றியமையாத சில சீர்திருத்தங்களைச் செய்தார். பின்னர் அவர் தென்னாட்டாட்சி என்னாயிற்றோ என்று மீண்டு மதுரைக்கு வந்து சேர்ந்தார்.

## 16. குடிசெயல்

### சோழவந்தான்

அரியநாதர் விஜயநகரம் சென்று, மீண்டும் மதுரையடைவதற்கிடையில் **மூன்றியாண்டுகள்** கழிந்தன. அவர் மதுரையில் இல்லை என்பதை யறிந்த தென்னாட்டு வீரர் சிலர் மதுரை மீது எழுந்தனர். அவர்களுள் வடுகவீரனாகிய **தும்பிச்சிநாயக்கன்** என்பவன் ஒருவன். அவனைக் குமார கிருஷ்ணப்ப நாயக்கன் எதிர்த்துப்போர் செய்து வெற்றி பெற்றான். தும்பிச்சிநாயக்கன் அழிந்ததை யறிந்த **கண்டிராஜன்** கிளம்பினான். அவனையும் வென்று



வீறு பெற்றான் குமார கிருஷ்ணப்பன். எனினும் இவ்விரண்டு வெற்றிக்கும் காரணம் அரியநாதர் அமர்த்திச் சென்ற அரிய ஏற்பாடுகளேயாகும்.

திரும்பிவந்த தளவாய் குமாரகிருஷ்ணப்பனுடைய அறிவையும் ஆற்றலையும் மெச்சினார். அதன்பின் ஆக்கத்தக்கதி யாதென ஆராய்ந்தார்.

> " நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
> இல்லாண்மை யாக்கிக் கொளல்."

என்பதை அவர் என்றும் மறவாதவர்.

> " அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
> சகடக்கால் போல வரும்.';

ஆதலால், தமது இனத்தாரை ஆக்குதலே முதற் கடமை எனத் தொடங்கினார்.

மதுரைமா நகருக்கு வடமேற்கே **சோழவந்தான்** என்னும் ஊர் உளது. அதற்கும் மதுரைக்கும் சுமார் ஏழுமைல் இருக்கும். அது வைகை நதிக் கரையில் இருக்கிறது. அது மூவளங்களால் சிறந்தது. அப்பதியை அரியநாதர் இருப்பிடமாகக் கொண்டிருந்தார். அவ்வூரில் தமது இனத்தைப் பெருக்க வேண்டுமென்பது அரியநாதரின் ஆவல். ஆகவே தாம் பிறந்த **மெய்ப்பேட்டி**லிருந்தும் அதற்கடுத்த **பெருநாடு** என்னும் ஊரிலிருந்தும் முந்நூறு குடிகளை வருவித்து ஒவ்வொருவர்க்கும் ஒவ்வோரில்லங்கட்டித்தந்தார். அவர்கட்கு வேண்டிய நிலம் புலங்களைக் கொடுத்தார். உழவுத் தொழிலுக்கேற்ற உதவிகளைப் புரியும் ஊழியக்காரர்களையும் குடியேற்றினார். இப்படிப் பல குடும்பங்களைக் கொணர்ந்து சேர்த்ததனால் சோழவந்தான் ஒரு பெரும்பதியாயிற்று. ஆகவே, "ஊரா

னோர் தேவகுலம்" என்பதற் கேற்ப சிறந்த கோவில் எழுப்பினார். அதன் அன்றாட பூசைக்குரிய மானியங்களைத் தந்தார். அக்கோவில் மணியத்தைத் தமது குலகுருவாகிய **வசந்தராய குருக்க**ளிடம் ஒப்புவித்தார். பின்னொருக்கால் படையெடுப்பு நேரில் அழிவு நேராதிருப்பதன் பொருட்டு அரிமதிலுடன் கூடிய கோட்டை யொன்று செய்தார்.

## அரியநாயகபுரம்

சிறந்த பொருள், இடம், காலம் கிடைத்த போது தமக்கே பயன்படுத்தக் கருதுதலும் அங்ஙனம் படாதொழியின் வீணாக்குவதும் பெரும்பாலார் செயல். அவற்றால் பிறரும் பயன்படக் கருதிச் செய்வார் சிலரே. அத்தகையார், "தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்" எனப்படுவர். தாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்னு மெண்ணமுடையார் பெரியர். இதனை

> "செயற் கரிய செய்வார் பெரியர் சிறியர்
> செயற் கரிய செய்கலா தார்"

என்பதனாலு மறியலாம். பல்வளனும் பயிர்ப் பயனும் மிக்க தக்கதோரிடத்தைக் காணும்போதெல்லாம் தளவாய் தமது குடிமக்களைக் கருதுவார்.

"உழவர்க் கழகேர் உழுதூண் விரும்பல்" அதற்கு இன்றியமையாதது செழிப்புள்ள நிலம். எனவேதான் அரியநாதர் அத்தன்மைய இடங்களைக் கண்டால் இனத்தாரை யெண்ணுவர். சோழவந்தானில் பல வேளாளரைக் குடியேற்றிய பின்னர், அவர் தாமிரவருணி நதிக்கரையிலுள்ள நல்லதோரிடத்தை நாடினார். அது **பேரியகுளத்**துக்கு அணித்தானது. அவ்விடத்திலும் தொண்டை மண்டல வேளாளர் பலரைக் குடியேற்றினார். அவரவர்க்கும் ஆவன புரிந்தார். ஆதலால், அவ்வூர்க்கு **அரியநாயகபுரம்** என்னும் பெயர் வழங்குவதாயிற்று.



## பலகுடி புரத்தல்

தனியூர்கள் இரண்டில் தம் இனத்தவரைக் குடியேற்றிய தளவாய் பின்னரும் பல ஊர்களைத் தேர்ந்து ஆங்காங்கே தொண்டை நாட்டு வேளாளர்களைக் குடிபுகச் செய்தார். அப்படிச் செய்யப் பட்டோர் அனைவரும் அரியநாதரின் உறவினர் என்பதற்கில்லை.

> "இன்னர் இனியர் எமர்பிறர் என்னுஞ்சொல்
> என்னும் இலராம் இயல்பினால் — தன்னும்
> தொலைமக்கள் தன்பக்கீர்ப் பாரேயார் மாட்டும்
> தலைமக்க ளாகற்பா லார்"

என்னுமாப் போல், எண்ணற்ற வேளாண் குடி மக்களைத் தொண்டை நாட்டினின்று கொண்டு சென்று பாண்டி நாட்டில் வாழவைத்தார். அப்படி அவர் பலரைக் குடிபுகச் செய்த ஊர்கள் **நகரி, புத்தனேரி, திருமங்கலம்** என்னும் ஊர்களாம். ஆதலால், தொண்டை மண்டல வேளாளர் பாண்டி நாடெங்கும் பல்கிப் பரவினர். அன்றியும் செல்வத்தால் சிறந்தும் விளங்கினர். அவ்வேளாண் குடிச் செல்வர்களை இன்றும் பாண்டி நாட்டுப் பல பதிகளில் காணலாகும்.

தாமிரவருணி நதிக்கரையில் திருநெல்வேலிச் சீமையில் அரியநாதரால் குடியேற்றப்பட்டவர்கள் மிகவிரைவில் நல்வாழ்க்கையுற்றனர். அவர்களுள் **வீரராகவ முதலியார்** என்பவர் ஒருவர். வன்மை

யும் வண்மையுங் கொண்டு தென்னிந்தியாவுக்குப் பொதுவாகவும் தென்பாண்டி நாட்டுக்குச் சிறப்பாகவும் நலம் புரிந்த தளவாய் முதலியாரது குலத்திற் பிறந்த வீரராகவ முதலியாரும் திருநெல்வேலிச் சிந்துபூந்துறை இந்து கலாசாலையின் எதிரில் ஒரு நகரை ஆக்கினர். அதன் பெயரேதான் **வீரராகவ புரம்**. குலத்தளவே யாகும் குணம் அல்லவா!

## 17. முதுமையிலும் முயற்சி

குமாரகிருஷ்ணப்ப நாயக்கன் ஆயுள் முடிந்தது. அதன்பின் அவன் மகன் **வீரப்ப நாயக்கனுக்கு** முடிசூட்டி வைத்தார் முதலியார், மதுரையில் விசுவநாதன் ஆட்சி தொடங்கியது முதல் அனைத்துப் பொறுப்பையும் ஏற்று வந்த அரியநாதரே இப்பொழுதும் ஏற்று நடத்திவந்தார். அரியநாதர் தொட்டது பொன்; சொன்னது சட்டம். அவர் கருத்துக்கு மாறுகூறுவாரிலர். தன் பாட்டன் கால முதல் அரியநாதர் செய்த சேவைகளையும் அதனால் பாண்டிய நாட்டிற்குற்ற நன்மை, மேன்மைகளையும் கண்டும் கேட்டுமிருந்த வீரப்பன் தளவாய் விருப்பப்படி நடந்து கொண்டான்.

தம்மை நம்பிய மன்னர் பொருட்டே வாழ்நாள் முழுதையும் வழங்கிய முதலியார் வீரப்பன் வகையில் வேறாக நடப்பாரா!

> "வீழ்நாள் படாமை நன்றாற்றின் அஃதொருவன்
> வாழ்நாள் வழியடைக்குங் கல்"

என்பதே அவர் நோன்பு. அந்த நோன்பிலிருந்து அவர் அணுவளவேனும் ஒருபோதும் தவறியவரல்லர். யாண்டுபலவாகி முதிர்ந்தும் ஆண்மையும் ஊக்கமும் குன்றாத அரியநாதர், ஆட்சிக்கே ஒரு



அச்சாணியாயிருந்தார். அடிக்கடி பெனுகொண்டா சிரங்கம், சந்திரகிரி ஆகிய அரசுகட்கு ஆகவேண்டியவற்றையும் புரிந்து வந்தார், பெனுகொண்டா முதலிய வடநாட்டுக் குடிகளும், சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாட்டுக் குடிகளும் அரசர் வகையிலன்றி அரியநாதர் வகையிலேயே பெரும் பற்றும் அன்பும் அடக்கமுங் கொண்டிருந்தார்கள். இதற்குக் காரணம் நாட்டுவளம் பெருக்கிக் குடிகட்கு நல்வாழ்வளித்தமையேயாகும். இக்காரணங்களால் பகைவரும் தளவாய் பெயர் கேட்டு அஞ்சி, மிஞ்சாதடங்கியிருந்ததும்.

பாண்டிய நாட்டில் **மாவலி வாணர்** என்ற வகையினர் வாழ்ந்தனர். அவர்கட்கும் அரியநாதர் பாளையப்பட்டு உரிமையளித்திருந்தார். ஆனால், பிற்காலத்தில் அக்குடியிற்றோன்றிய ஒருவன் பெருவீர முற்றிருந்ததனால் தனியரசு விரும்பினான். வீரப்பனாட்சிக் கடங்காமல் கிளர்ந்தான். சில வீரரைச் சேர்த்துக் கொண்டான். மானாமதுரை, காளையார் கோவில் ஆகிய இருநகரங்களையும் அவற்றைச் சூழ்ந்த நிலப்பகுதியையும் கைப்பற்றினான். பின்னும் பல சேதங்கள் புரியத் தொடங்கினான். ஆயினும், அரியநாதர் அவன்மீது போர்க்கெழாமலே தந்திரமாக வசப்படுத்தக் கருதினார்.

> "கட்டாண்மை வேந்தர் பொறுமை யென்னுந வன்கண்ணாடி
> பட்டாலல்லாமல் வணங்கார் இடமுட் படாமற் சும்மா
> தொட்டாலது பின்னைப் பூச்சியென்பார் சுற்றுக்கெனவே
> கொட்டாமல் தேளென்பரோ அச்சுதானந்த கோவிந்தனே"

என்றவாறு அவன் அதற்கிணங்காது தருக்கினான் போருக்கெழுந்தான். சான்றோராகிய தளவாய் அவன் பொருட்டு மிகப் பரிந்தார். "விதிவலிது" நாமென் செய்வோம் எனப் படைகளைத் திரட்டி, வீரப்பனையும் கூட்டிக்கொண்டு போர்க்கெழுந்தார். என்னாயிற்று. அரியநாதர் ஆற்றலுக்கெதிரே ஆற்றாமல் அடிபணிந்தான். ஆதலால், அவனை மன்னித்து பழையபடி பாளையப்பட்டுப் பதவிதந்து அனுப்பினார்.

## 18. முதுமையில் சூட்டிய முடி

வீரப்பன் ஆட்சியிலும் அரியநாதர் அரும்பணி பல புரிந்தார். **சிதம்பரம் கோவிலின் மதி**லும் மதுரையிலுள்ள **கம்பத்தடி** என்னும் மண்டபமும் **அருப்புக் கோட்டை** என்னும் இடத்தில் ஒரு கற்கோட்டையும் அரியநாதர் விருப்பப்படி வீரப்பனால் ஆக்கப்பட்டவைகளே. இவ்வாறு தளவாய் கருத்துக்கியையவும் தன்மரபுக்கேற்பவும் இனிதாக ஆட்சி புரிந்த வீரப்ப நாயக்கன் விண்ணுலகுற்றான். வீரப்பனுக்கு மைந்தர் இருவர். அவர்களுள் மூத்தவன் பெயர் **வீரகிருஷ்ணப்பன்**. இளையவன் பெயர் **விசுவப்பன்**.

குலமுறைப்படி அரசு வீரகிருஷ்ணப்பனுக்கு உரிமையாயிற்று. அரியநாதர் முடிபுனைவிழாவுக்கு நல்லதோர் நாளைக் குறித்தார். விசுவநாத நாயக்கன், குமார கிருஷ்ணப்ப நாயக்கன், வீரப்ப நாயக்கன் ஆகிய மூவர்க்கும் முடிசூட்டிய முதியவராகிய முதலியார் முழுவுவகையோடு அரிய கைகளால் அம்பொன்முடியை யெடுத்து ஆண்டவனைத் துதித்துச் சூட்டினார். பல்லாண்டு வாழ்கவென



வாழ்த்தினார். வீரகிருஷ்ணப்பன் மிகக்களிப்போடு அரியணை ஏறினான்.

இளையவன் விசுவப்ப நாயக்கன் மனவேறுபாடு கொண்டான். தமையனிடம் ஒற்றுமையின்றி நடக்கத் தொடங்கினான். அதைக் கண்டார் அரியநாதர். அவனைத் தனியே அழைத்து அவனுடைய விருப்பத்தைக் கேட்டார். அவன் "மதுரை ஆட்சியில் தனக்கு உரிமை வேண்டும்" என்றான். உடனே வீர கிருஷ்ணப்பனை யண்மி தம்பியின் கருத்தைக் கூறினார். உடன் பிறந்தவர்க்குள் மனவேறுபாடிருந்தால் மாபெருந் தீங்கு விளையும் எனக் கூறினார். அவன் "தங்கள் கருத்தெதுவோ அதனைச் செய்யுங்கள். இவ்வரசு என்றும் தங்களாணையில் நடக்கும்" என்றான். "அப்படியானால் மதுரை ஆட்சியில் விசுவப்பனுக்கு **சின்னதுரை**ப் பட்டம் தருவோம்" எனக் கூறி அவனிசைவு பெற்றார். அப்படியே விசுவப்பனுக்குச் சின்ன துரைப் பட்டம் கட்டினார். அவனைத் தன்னுடன் வைத்துக்கொண்டு அமைச்சுத் தொழிலும் அமர்த்தொழிலும் நன்கு பயிற்றினார். அவ்விரு திறத்திலும் அளவற்ற திறன் பெற்றான் விசுவப்பன். ஆதலால், வீர கிருஷ்ணப்பனுக்கு மந்திரியாகவும் தந்திரியாகவும் விசுவப்பன் உதவினான். அண்ணனும் தம்பியும் உயிரும் உடலும் போன்றும் நகமும் சதையும் போன்றும் ஒன்றுபட்டு வாழ்ந்தார்கள்

## 19. தோன்றல்

*"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலிற் றோன்றாமை நன்று"*

என்பது திருவள்ளுவர் திருமொழி. மக்களுருவிற் பிறப்போர் அனைவரும் மக்களாகார். ஆறறிவும்

ஆன்ற வொழுக்கமும் உடையவரே உண்மையில் மக்களெனப்படுவார். அத்தகையோர் பலர் நம் நாட்டிலும் பிறநாடுகளிலும் தோன்றியுள்ளனர். அவருள்ளும் சிலர், கால்வழி கால்வழியாகக் கண்ணியமான குடியில் பிறந்தவராயிருப்பர். சிலர், மகனறிவு தந்தையறிவு என்பதற்கேற்ப வுதித்தவராயிருப்பர். மற்றும் சிலர் மிகவெளிய குடும்பத்திற் பிறந்து, மிகச் சிறந்த கல்வி, அறிவு, ஒழுக்கம், செயல்கள் வாய்க்கப்பெற்றோராயிருப்பர். ஆகவே தான்

> "கள்ளி வயிற்றி னகில்பிறக்கும் மான்வயிற்றில்
> ஒள்ளரி தாரம் பிறக்கும்—பெருங்கடலுள்
> பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
> நல்லாள் பிறக்கும் குடி"

என்றாரறிஞர். இப்படி எளிய குடியில் பிறந்து அரிய செயல் புரிந்தவரும் தன் இல்லம், தன் ஊர், தன்னாடு, தான், தன்னுறவினர், தன் மதம் என்பன முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றுபற்றிப் பாடுபட்டு நன்மை கண்டவராயிருப்பர். ஆனால், அரியநாதரைப் போல அனைத்துவகையிலும் சிறந்த ஒருவரைக் காண்பதரிது. பேரறிவும், பெருங்குணமும், செரு வன்மையும், செயல் திறனும், நெடிதாயுளும், திருவருளும் பெற்ற அவரை நோக்குங்கால்

> "இருவே றுலகத் தியற்கை திருவேறு
> தெள்ளிய ராதலும் வேறு"

என்ற முதுமொழி முற்றும் மாறுபட்டதே.

அறிவாற் சிறந்த அவர் திருவாய்க்கப்பெற்றது பெருவியப்பு. அன்றியும் உணவுக்கும் உடைக்கும் உளமேங்கி வருந்திய வறியகுடியில் தோன்றிய அரியநாதர் மன்னர்கட்கு மன்னராகிய கிருஷ்ண



தேவராயர்க்கு உயிர்காக்கும் உயர்பதவி பெற்றதும் பாண்டிய நாட்டு மன்னர் நால்வர்க்கு முடிசூட்டும் முதன்மைப் பதவி ஏற்றதும் அளவற்ற கோட்டைகள், கோவில்கள், மதில்கள், திருப்பணிகள் புரியும் நிலையுற்றதும் வியப்பன்றே! நாடிய மன்னர்க்கு நாட்டுரிமை ஆக்கலும் நட்பாய மன்னர் உரிமையைக் காத்தலும் பகைத்தார் பதவியுடன் உயிரைப் போக்கலும் ஆகிய முத்தொழிலில் வல்ல அரியநாதரைத் தோன்றல் என்பதிலும் தோன்றல்களுள் முதல்வர் என்பதிலும் ஐயம் என்னை!

> "அறிவுடையா ரெல்லா முடையார் அறிவிலார்
> என்னுடைய ரேனு மிலர்"

ஆயினும் உலகியற்கை

> "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
> பெருமை புடைத்திவ் வுலகு"

என்பதாகலின் கால வேகத்தில் நல்லோர், அறிஞர், வீரர், அரசர், கொடைஞர் என்னும் வேறுபாடின்றி வீழ்ச்சி விளைவதுபோலவே புல்லாற்றானும் பயன்பட்ட அரியநாதரும் வீழ்ச்சியுற்றார்.

## 20. காலவரையறை

நம் நாட்டுப் பெரியார் பலருடைய வரலாறுகள் தெளிவுற அறிதற்கின்றிக் கிடக்கின்றன. அன்றியும் சிலருடைய வரலாறு தெரியினும் அவருடைய காலம் அறிய முடிவதில்லை. ஆனால், நம் அரியநாதருடைய வாழ்க்கை அரசியலில் சம்பந்தமுடையதுபற்றி நாம் அறியக்கூடியதாயிற்று. ஆயினும் அவருடைய பிறந்த யாண்டு ஒருவராலும் கூறப்படவில்லை. வாழ்க்கை முடிவுமாத்திரமே அறுதியிட்டுக்

கூறியுள்ளார்கள். அதைக்கொண்டும் மற்ற நிகழ்ச்சிகளையும் கொண்டும் அவர் பிறந்த யாண்டை முடிவு கட்டலாம்.

அரியநாதர் மதுரையரசுக்கு முதல் மந்திரியாயின பின்பு, தஞ்சையில் சேவப்ப நாயக்கனுக்கு வல்லத்தைத் தந்து திரிசிராப்பள்ளியை அரசிருக்கையாக்கிய பின்னர், ஒரு நிகழ்ச்சி கூறப்படுகின்றது. அதாவது தமக்கு இராஜயோகம் வருமெனக் கூறிய அந்தணர்க்கு எழுதிக் கொடுத்த ஓலைச்சீட்டை, அம்மறையவருடைய புதல்வன் கொண்டுவந்தான். அதைப்பார்த்து அரியநாதர் நான் ஐம்பது யாண்டுகட்குமுன் எழுதிக் கொடுத்தேன்'' என்கிறார். கி. பி. 1529-இல் மதுரை ஆட்சி விசுவநாத நாயக்கருக்கு உரிமையாயிற்று. அதன் பின்னர் சேவப்பன் கி. பி. 1549 ல் தஞ்சைக்கு வந்து ஆட்சி ஏற்றான். அவன் வந்த சில யாண்டுகள் கடந்தே திரிசிரபுரத்தைப் பெற்றிருக்க வேண்டும். அப்படிப் பெற்றிருந்தும் அதில் கோட்டை, அரண்மனை முதலிய பல சீர்திருத்தங்கள், செய்யப்பட்டுள்ளன. எல்லைப்புற நகரமாதலால் பகைவரணுகுதற்கரிய முறையில் பல ஏற்பாடுகளை அரியநாதர் அங்குச் செய்தார் என்பதை நாம் அறிவோம். அதில் சில யாண்டுகள் கழிந்திருக்கும்.

எல்லா வகை வாய்ப்புக்களும் அமைந்த பின்னரே விசுவநாதர் திரிசிராப்பள்ளியை அரசிருக்கை நகரமாக்கிக் கொண்டார். அதன் பின்னரே மறையவர் மகன் திரிசிரபுரத்துக்கு வந்தானென்று தெரிகிறது. ஆனால், அரியநாதர் விஜயநகரமன்னர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு



தலைக்கோட்டைப் போருக்குச் சென்றதாகவும் நாம் படித்திருக்கிறோம். அப்போர் கி.பி. 1565-ல் தொடங்கியது. ஆகவே, அதற்கு முன்னரே மறையவர் மகன் வந்திருக்கவேண்டும். இவற்றிலிருந்து அரியநாத முதலியாரை மறையவர் புதல்வன் வந்து சந்தித்தது சுமார் கி. பி. 1560 ஆக இருக்கலாம். கி. பி. 1560-க்கு முன் ஐம்பது யாண்டுகள் என்றால் மறையவர் அரியநாதருடைய ராஜயோகத்தைப் பற்றிக் கூறியது 1510 ஆக இருக்கவேண்டும். அப்போது அவர்க்கு வயது சுமார் 16 இருந்திருக்கலாம்.

வேதியர் கூறிய யோகக்குறிக்குப் பின் இரண்டு அல்லது ஒரு யாண்டாவது கடந்தே அரியநாதர் விஜயநகரம் சென்றிருப்பார். எப்படி எனில் அதன் பின்னரே அவர் நம்பியாணிடம் தெலுங்கு கற்றிருக்கிறார். ஆனதால் எப்படியும் அரியநாதர் சுமார் இருபது வயதிலேதான் விஜயநகரம் சென்றிருக்கவேண்டும் என்றால் அரியநாதர், கி. பி. 1490-95-இல் பிறந்தவராதல் வேண்டும். மற்றும் கிருஷ்ணதேவராயர் புரிந்த இராயச்சூர் போர் கி. பி. 1520-இல் நிகழ்ந்தது. அப்பொழுது அரியநாதர்க்கு வயது 25 அல்லது 30-க்குள் இருக்குமென்பது மேற் கூறிய காரணங்களால் புலப்படும்.

அரியநாதர் கி. பி. 1600-ல் சித்திரை (ஏப்ரல்) மாதம் காலமாயினர் என்பது அறிஞர் பலருடைய கூற்று. அவ்வறிஞர்கள் '' அரியநாதர் இறக்கும்போது அவருக்கு வயது நூற்றுக்குமேல்'' என்கின்றனர். எனவே அரியநாதர் கி. பி. 1490-க்குப் பின் கி. பி. 1495-க்குள் பிறந்தவரென்று கூறுவதில் தவறொன்றுமில்லை.

44280

நெடு வாழ்க்கையாளராயும் நிகரிலாப் புகழ் நிறைந்த வறிவு, தக்க தறுகண்மை ஆகியவற்றை யுடையவராயும் விளங்கிய தளவாய் அரியநாத முதலியார் பெரு வாழ்விலிருந்தே பெருமானடி யெய்தினர்.

அரியநாதர் தாமே செய்த திருப்பணிகளுள் ஒன்றாகிய மதுரை ஆயிரக்கால் மண்டபத்தின் முன்புரத்தில் அரியநாதர், தமது புரவிமீது வீற்றிருப்பது போன்ற உருவச்சிலை செவ்விதினமைந்துள்ளது.

> "ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்
> பொன்றாது நிற்பதொன் றில்"

என்றதே போல் அரியநாதருடைய சீர்த்தி அழியாது இன்றும் நிலைத்திருக்கிறது.

Andhra Printing House G. H. M. S. 171 C. 100 11-12-'46